# குருதெனிய குருந்துவத்தை

## ஸ்ரீ ஆறு கன்னி

# முத்து மாரியம்மன் கோயில்



# மஹாகும்பாபிஷேகச் சிறப்பு மலர்

## 14.07.2014

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருதெனிய குருந்துவத்தை

# அருள்மிகு ஸ்ரீ ஆறுகன்னி

# முத்துமாரியம்மன் கோயில்

# மஹா கும்பாபிஷேகப் பெருவிழா

# சிறப்பு மலர்

# 14-07-2014


மலர் ஆசிரியர்

**இராசையா மகேஸ்வரன்**

கல்விசார் முதுநிலை நூலகர்

பேராதனைப் பல்கலைக்கழகம்

உதவி ஆசிரியர்

**ஆறுமுகம் கிருஷ்ணமூர்த்தி**



மலர் வெளியீடு

பரிபாலன சபை

அருள்மிகு ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரியம்மன் கோயில்

குருந்துவத்தை, குருதெனிய.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# ஆசிச்செய்தி

கண்டி குருதெனிய ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரியம்பாள் திருக்கோவில் இன்று நமது நாட்டின் மஹாநதி மகாவலி கங்கைக்குப் பெருமை சேர்க்கும் தனிக் கோவிலாக அமைந்துள்ளது. இங்கு நடைபெறும் "ஆடி பதினெட்டாம் பெருக்கு" பெருவிழா வேறு எங்கும் நடைபெறுவதில்லை. இவ்வாலய மூலமூர்த்தியும் வேறு எங்கும் இல்லாத மூர்த்தியாகும்.

இவ்வாலயம் முழுவதும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. விழாவின் பெருமையால் நாடு சிறக்கவும். நன்கொடையாளர்கள், பக்தர்கள் அருட்பேறு பெற்று சிறப்பாக சுமங்கலிகள், கன்னியர்கள், மங்கலம் பொலிய வாழவும் வாழ்த்தி ஆசிகூறுகின்றேன்.

"வேதாகம வித்யா பூஷணம்"
சிவஸ்ரீ விஸ்வ நாராயணக் குருக்கள்
(இவ்விழா சர்வசாதகர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# பிரதிஷ்டா பிரதமகுருவின் ஆசியுரை

அம்பிகை அடியார்களே!

கண்டி குருதெனிய குருந்துவத்தை ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரி அம்பாளின் திருக்கோயிலில் முத்துமாரி அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பழமையும் பெருமையும் வாய்ந்த இவ்வாலயத்தில் அம்பாள் ஆறு கன்னிகைகள் அமைந்து நின்ற திருவுருவத்துடன் அருளாட்சி செய்கின்றாள்.

அன்னையின் ஆலயம் முற்றிலும் புதிதாக துவிதன விமானத்துடன் பளிங்குக்கல் திருப்பணி நடைபெற்று இந்திரலோகமென மிளிர்கிறது. சுமங்கலிகளின் மாங்கல்யம் பெருக்கும் ஆடி பெருக்கு விழாக்காணும் ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் மஹா கும்பாபிஷேகத்தில் கலந்து கொள்ளும் ஆலய பரிபாலன சபையினருக்கும், அடியவர்களுக்கும் அம்பாளின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

பிரதிஷ்டா பிரதம குரு
"சிவாகம தத்துவ நிதி"
"ஆகம கிரியா ஜோதி"
"சிவஸ்ரீ ஜோதி"
பத்மநாதக் குருக்கள்
கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



சிவாகம கிரியா சாகரம், கும்பாபிஷேக கிரியாமணி
மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார்
பிரம்ம ஸ்ரீ சு. சிவானந்த குருக்கள் அவர்களின்

## ஆசிச் செய்தி

ஈழத்திருநாட்டில் மத்திய மாகாணத்தின் தலைவாயிலாக திகழும் வரலாற்று புகழ்மிக்க கண்டி மா நகரில், குருதெனிய குருந்துவத்தையில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரி அம்பிகையின் கருணையால் 14.07.2014 அன்றைய தினம் நவகுண்ட பக்ஷ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறவுள்ளதையிட்டுப் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன். அண்ட சராசரங்கள் அனைத்தின் தோற்றத்திற்கும் அவற்றின் இயக்கத்திற்கும் சக்தியே முழுமுதற் காரணம் என்பதை நம் முன்னோர்கள் அறிந்திருந்தார்கள். இன்று தமிழ் நாட்டில் மட்டுமின்றி கடல் கடந்து தமிழ் இந்துக்கள் வாழும் நாடுகளில் எல்லாம் சக்தி வழிபாட்டுக்குரிய முக்கிய திருக்கோலமாக விளங்குவது ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோலமாகும்.

இத் திருக்கோலச் சிறப்பு இலங்கையின் தலைச்சிறந்த சக்தி பீடமாகத் திகழும் கண்டி, குருதெனிய ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரியம்மன் திருக்கோவிலில் சிறந்து விளங்குவது தவப்பயனாகும்.

இலங்கைத் திருநாட்டில் ஆடி 18 அன்று மகாவலி கங்கையில் விளக்கு பூஜை நடைபெறும் தனித்துவமான ஆலயம் இவ் குருந்துவத்தை ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரியம்மன் ஆலயம் ஒன்றே ஆகும்.

இவ்வாலயத்தின் நவகுண்ட பக்ஷ அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேகம் இனிதே நடைபெற மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் பாதங்களைத் தொட்டு வணங்கி ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரியம்பிகையின் கருணை கிட்டவேண்டுமெனப்பிரார்த்திக்கின்றேன்.

"சுபமஸ்து"

மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான பிரதம குரு
"வேதாகம கிரியாமணி"
பிரம்மஸ்ரீ சு. சிவானந்தக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
அறுகன்னி ஸ்ரீ முத்துமாரி அம்மன் துணை



## ஆலய பிரதமகுருவின் ஆசிச் செய்தி

ஸ்ரீ லங்காபுரியில் கண்டி மாநகரில் குருதெனிய குருந்துவத்தை திவ்ய மகா சேத்திரத்தில் ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரி அம்மன் திருக்கோவில் மத்திய மலை நாட்டின் அழகுமிக்க திருக்கோவிலாக விளங்குகின்றது. இவ்வாலயம் இன்று முற்றிலும் புதிதாகத் திருப்பணிகள் செய்யப்பட்டு கும்பாபிஷேக விழா நடைபெற அன்னையின் திருவருள் கை கூடியுள்ளது.

இவ் ஆலயத்தில் ஆடிப்பெருக்கு விழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது என்றால் மிகையாகாது. ஸ்ரீ லங்காவில் எந்தவொரு ஆலயத்திலும் நடைபெறாதவாறு ஆடிப்பெருக்கு விழா இவ் ஆலயத்தில் அன்னையின் பக்தர்கள் புடை சூழ வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. ஆலய அறப்பணியில் தர்மபரிபாலன அறங்காவலர் சபையினரும் ஏனைய அடியார்களும் ஆலாயத்திற்கு வழங்கும் பூரண ஆதரவு குறிப்பிடத்தக்கது. அன்னையின் அருட்பணியினைப் பூரணமாக ஆற்றுவதில் நலம் வரும் என்றால் மிகை இல்லை. அன்னை அருளாசியுடன் நடைபெறும் இவ் மகா கும்பாபிஷேகம் சிறக்க அன்னையைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

"சுபமஸ்து"

இறைப்பணிச்செம்மல்
ஆலய பிரதம குரு
பிரம்மஸ்ரீ மா. சசிதர சர்மா
ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரி அம்மன் கோவில்
குருந்துவத்தை, குருதெனிய,
கண்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# இந்திய உதவித் தூதுவர் மாண்புமிகு ஆ. நடராஜன் அவர்களின் வாழ்த்துச் செய்தி

கண்டி, குருதெனிய குருந்துவத்தை ஸ்ரீ ஆறு கன்னி முத்துமாரியம்மன் ஆலய மகா கும்பாபிஷேகப் பெருவிழா இன்று 14ம் திகதி (14.07.2014) நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இலங்கை இந்திய நல்லுறவுகளில் இந்திய மத கலாசாரப் பிணைப்புகள் காலத்தால் முந்தியவை. இந்திய வம்சாவளி மக்களின் பாரம்பரிய மத பண்பாட்டுத் துறையில் மாரியம்மன் வழிபாடு தனித்துவமானது. மக்களின் நல் வாழ்விற்கு மழையும், நோயற்ற வாழ்வும் அடிப்படையாகும். இதற்கு மாரியம்மனே முதல் தெய்வம். இலங்கை மலையகமெங்கும் இந்திய வம்சாவளி மக்கள் குடியமர்த்தப்பட்ட அனைத்து பகுதிகளிலும் மாரியம்மன் வழிபாடே மூல வேராக அமைந்துள்ளதைக் காணலாம். இவ்வகையில் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பே கண்டி குருதெனிய குருந்துவத்தையில் தனித்துவமாக இலங்கையின் ஒரே ஒரு ஆலயமாக ஆறு கன்னி - ஆறு கன்னியர்களைக் கையில் ஏந்திய ஸ்ரீ முத்துமாரி அம்பாள் வீற்றிருக்கும் மகிமையும், பெருமையும், பழமையும் மிக்க இவ்வாலயத்தின் மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவது, பக்திபரவசத்தின் வெளிப்பாடாகும். அனைத்து மக்களும் சாந்தி, சமாதான, சக சகோதரத்துவ நல் வாழ்விலும் பல் வளத்திலும் சிறப்பாய், செழிப்பாய் வாழ்வாங்கு வாழ்வதற்கு அன்னை ஆறு கன்னி ஸ்ரீ முத்துமாரி அம்மனின் பேரருள் கிட்டிடப் பிரார்த்திப்பதோடு, எனது இதயம் கனிந்த நல் வாழ்த்துக்களையும் இவ்வாலய பரிபாலன சபையோருக்கும் ஏனையோருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆ. நடராஜன்
இந்திய உதவித் தூதுவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# தலைவரின் செய்தி

## அம்பாள் நல்லருள் பொழிவாராக.......

இலங்கைத் திருநாட்டில், மத்திய மாகாணத்தில் எழில் கொஞ்சும் தலைநகர் கண்டிக்கு அருகில் குருதெனிய குருந்துவத்தையில் எனது மூதாதையரின் நிலத்தில் எனது மூதாதையரின் முயற்சியில் அமைக்கப்பட்ட ஆறுகன்னி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் கிராம மக்களதும், பரோபகாரிகளினதும், அம்மாள் அடியார்களினதும் பெரிய உதவியினால் இன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

இப்பக்திகரமான, காணுவதற்கரிதான மகா கும்பாபிஷேக நிகழ்ச்சி எமது வைசமக்களைப் பொருத்தமட்டில் மிகவும் வணக்கத்திற்குரிய வழிபாடாகும். இன்றைய குடமுழுக்கு நீர் உங்கள் மேனியில்பட்டு நீண்ட ஆயுளும், எல்லாம் வல்ல அம்பாளின் அருளும் கிடைக்க வேண்டும் எனப் பிரார்த்திப்பவனாக, இந்தக் கும்பாபிஷேகம் சிறப்புற அமைய உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து, இந்த விழாச் சிறப்புறப் பேரருள் தந்தமைக்காக அம்பாளிடம் சரணாகதி அடைகிறேன்.

இத்திருப்பணி செவ்வனே நடைபெற உடலாலும், உள்ளத்தாலும், பொருளாலும் பேருதவி புரிந்த பரிபாலன சபையினருக்கும், அம்பாள் அடியார்களுக்கும் இக்குறிஞ்சி நிலத்தில் அம்பாள் கண்கொள்ளாக் காட்சியுடன் திகழ்வதை கண்டு உள்ளம் புளகாங்கிதமடையும் அனைவருக்கும் அன்னையின் அருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறேன்.

எத்தனை இடையூறுகள் வந்த போதும், அம்பாள் தன்னை வழிபடும் பக்தர்களை, தொண்டர்களைக் கைவிடுவதில்லை. அன்றுபோல் இன்றும் அனைத்துப் பக்தர்களும் ஒன்றாகக்கூடி வழிபடும் காட்சி என்னை மெய்மறக்கச் செய்கிறது.

நாட்டில் சாந்தியும், சமாதானமும் நிலைபெற ஆறுகன்னி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் நல்லருள் பொழிவாராக.

செல்லையா சிவக்குமார்
தலைவர்
ஆறுகன்னி ஸ்ரீ முத்துமாரி அம்மாள்
தேவஸ்தானம் - குருதெனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அறுகன்னி ஸ்ரீ முத்துமாரி அம்மன் துணை



# வாழ்த்துச் செய்தி

வேண்டுவோருக்கு வேண்டியதை வழங்க அன்னை ஆறுகன்னி அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாக விளங்கும் அன்னை ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரியம்மன் திருக்கோயில் மஹா கும்பாபிஷேகம் 2014-07-14 ம் திகதி திங்கட்கிழமை ஆயிரக்கணக்கான பக்தர்களின் ஹரோஹரா கோசத்துடன் நடைபெறவுள்ளது.

அரச காலத்தில் தமிழர்களுக்கும் காணிகள் வழங்கப்பட்டதனை வரலாறுகள் கூறுகின்றன. இந்த ஆறுகன்னி அம்மன் திருச்சிலையும் புராதனமானது. இப்படியான ஒரு வரலாறுமிக்க ஓர் ஆலயத்தில் செயலாளர் என்ற ஊழியத்தை அம்மனுக்குச் செய்ய எனக்குக் கிடைத்ததைப் பெரும் பாக்கியம் என்றே நினைக்கின்றேன்.

"திரை கடலோடியும் திரவியம் தேடு" என்பதைப் போல் எங்கு கோயில் கட்டுகின்றார்கள் என்று தேடி இலங்கையில் எல்லாப் பாகங்களில் இருந்து எமது இந்த ஆலயத்தை நிர்மாணித்துப் பூர்த்தி செய்வதற்காக உதவிக் கரங்களை நீட்டிய அனைத்து பக்தர்களுக்கும் நான் ஆலய பரிபாலன சபை சார்பாக நன்றி கூறுவதோடு அவர்களுக்கு ஆறுகன்னி ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் அருள் கிடைப்பதாக. அனைவரின் எல்லாக் குறைகளையும் நீக்கிப் பெருவாழ்வு வாழ தர வேண்டும் என்றும் அம்பாளைப் பிரார்த்திக்கின்றேன்.

எனது இனிய இந்து பக்தர்களே இந்த மலரைப் பணம் கொடுத்து வாங்கிச் சென்று இதை வாசிக்காமல்விடாதீர்கள். இதனை வாசித்து இதில் உள்ள விடயங்களை நாளை எமது இந்து மதத்தை போற்றிப் பாதுகாக்கவும் இந்து தர்மத்தை எடுத்துரைக்க உள்ள இளைய சந்ததியினருக்கும் பயன்படும் விதத்தில் செயற்படுங்கள்.

இலங்கை முதல் உலகில் எல்லா பாகங்களில் வாழும் எல்லா மக்களையும் ஆறுகன்னி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் காத்து அருள்புரிவாள் என உறுதியோடு கூறி மீண்டும் அனைவருக்கும் நன்றி கூறுகின்றேன்.

"வேப்பிள்ளைக்கு மிஞ்சிய மருந்தும் இல்லை
கூலுக்கு மிஞ்சிய விருந்தும் இல்லை"

ஆ. கிருஷ்ணமூர்த்தி
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# மத்திய மாகாண இந்து மாமன்றம் கண்டி அறக்கட்டளையின் ஸ்தாபக தர்மகர்த்தா – தலைவர் அவர்களின் ஆசிச்செய்தி

கண்டி குருதெனிய குருந்துவத்தை ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரியம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேகப் பெருவிழாவினை முன்னிட்டு வெளியிடப்படுகின்ற விழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தமையினை எல்லாம் வல்ல ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் அரும்பேறாகக் கருதுகின்றேன்.

இந்து மதத் தத்துவங்களை நோக்கும்போது ஆலய வழிபாட்டிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வந்துள்ளமையைக் காணலாம். இதனை அடிப்படையாகக் கொண்டே இந்துக்கள் தாம்வாழும் இடங்களில் ஆலயம் அமைத்து வழிபாடு நடாத்தி வருவதுடன் கலாசார விழுமியங்களைப் பேணிப்பாதுகாத்தும் வருகின்றனர். இதற்கமையவே "கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது இந்துமதச் சான்றோர்களின் வாக்காக அமைந்தது. அத்துடன் அது மனிதனை முழு மனிதனாக வாழவும் வழி சமைக்கின்றது.

இவ்வழியிலே கண்டி குருதெனிய குருந்துவத்தை ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரியம்மன் திருக்கோவில் பரிபாலன சபையினரும், ஊர்மக்களும் ஒன்றிணைந்து தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதுடன், இவ்வாலயத்தின் நவகுண்ட பக்ஷ அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகப் பெருவிழாவினை ஏற்பாடு செய்திருக்கின்றமை பிரதேச மக்களுக்கு மட்டுமின்றி இந்துக்கள் யாவருக்குமே ஒரு புண்ணிய கைங்கர்யமாக அமைகின்றது.

இவ்விழா வெகு சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி யாவருக்கும் நலமே கிட்டப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

துரை. சிவசுப்ரமணியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# வாழ்த்துச் செய்தி

கண்டி, குருதெனிய குருந்துவத்தை ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரி அம்மன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத்திற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாலயம் இப் பிரதேசத்தைச் சேர்ந்த அனைத்து மதத்தினருக்கும் வழிபாட்டுத் தலமாகத் திகழ வேண்டுமென்று வாழ்த்துவதோடு இவ் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறப்பெரும் பங்காற்றிய திரு. சிவா உட்பட அனைத்துப் பரிபாலன சபையினருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி
பெ. பாலசுப்பிரமணியம் J.P.
கண்டி இந்து இளைஞர் மன்ற
முன்னாள் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

அறுகன்னி ஸ்ரீ முத்துமாரி அம்மன் துணை

மஹா கும்பாபிஷேகப் பெருவிழா



## வாழ்த்துச் செய்தி

அம்பிகையின் கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெறுவதையிட்டுப் பக்திபூர்வமாக மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையின் மலைநகரில் அமைந்திருக்கும் கண்டி, குருதெனிய, குருந்துவத்தை அம்மன் ஆலயத்தில் பெரும் சிறப்பும் மகிமையும் கொண்ட ஆறுகன்னி அம்மனின் அருள் கடாசம் இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்கும் கிடைக்க அம்பாளை வணங்குகின்றேன்.

அதே போல் இக்கோவில் பழமை வாய்ந்த கோவில் என்பதால் தமிழ் மக்கள் வாழ்வதற்கு ஓர் அடையாளச் சின்னமாகத் திகழ்கிறது. கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற வாக்கின்படி இப்பெருவிழா எம்மக்களுக்கு பெரும் செல்வம். இப்பணி நடைபெறுவதற்கு அரும்பாடுபட்ட தலைவர் உட்பட அனைத்து உறுப்பினர்களுக்கும், நல் உள்ளங்களுக்கும் எனது அன்பான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இரா. பாஸ்கரன்
தலைவர்
இந்து இளைஞர் மன்றம் கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# வாழ்த்துச் செய்தி

கண்டி, குருதெனிய குருந்துவத்தை ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரியம்மன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக நிகழ்வையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஸ்ரீ முத்துமாரியம்மன் இத் தேவஸ்தானத்தில் நின்ற திருக்கோலத்தில் இருமருங்கும் ஆறு கன்னிகைகளாக வீற்றிருந்து ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரியம்மனாகப் பிறவிப் பெருங்கடலைக் கடக்க உறுதுணையாக இருந்து தன்னை நாடி வரும் பக்தர்களை இன, மத, குல வேறுபாடின்றிக் காத்துவருகிறாள்.


இக் கும்பாபிஷேகத்தை முன்னிட்டுத் தங்களால் இயன்ற நன்கொடைகளை வழங்கிய அன்பு உள்ளங்களுக்கு நன்றி பாராட்டுவதுடன், மெய்யடியார் அனைவரும் ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரி அம்மனின் மஹா கும்பாபிஷேகத்தில் பங்குபற்றி அனைத்து ஐஸ்வரியங்களையும் பெற்று மங்கள வாழ்வு வளம் பெற வாழ்த்துகிறேன். மேலும் இக் கும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற அம்பிகையின் சேவையில் இருக்கும் அறங்காவல் சபைத் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட அனைத்து உறுப்பினருக்கும், ஆலய பிரதம சிவாச்சாரியார் உட்பட அனைத்துச் சிவாச்சாரியருக்கும் என் மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவிப்பதோடு இவ் ஆலயத்தின் ஜீனோத்தாரண, அஷ்டமந்தன, சுவர்ணமந்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெறும் இப்புனித நாளில் அம்பாளின் அருளாசி அனைவருக்கும் கிடைக்க ஸ்ரீ ஆறுகன்னி அம்பிகையை பிரார்த்திக்கிறேன்.

"ஓம் சக்தி"

மு. தம்பித்துரை
கௌரவ அங்கத்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

ஆறுகன்னி ஸ்ரீ முத்துமாரியம்மன் துணை

இலங்கையின் மத்திய மலை நாட்டின் கண்டி குருதெனியவில் குடி கொண்டிருக்கும் ஆறுகன்னி ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அத்தோடு இங்கு குடி கொண்டிருக்கும் ஆறுகன்னி ஸ்ரீ முத்துமாரியம்மன் எமது கிராமம் முதல் வையகத்தில் உள்ள அனைத்து மானிடர்களுக்கும் சீறும் சிறப்பும் வழங்கி பல்லாண்டு வாழ அருள் புரிவாள் என்று பெருமையுடன் கூறுகின்றேன்.

இவ்வளவு மகிமையான இந்த ஆலயத்தை நிர்மாணித்து எமது அன்னையை குடிகொள்ள வைக்க எல்லா வகையிலும் உதவி செய்த அனைவருக்கும் அம்பாளின் அருட்கடாட்சாரம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

வணக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

கண்டி—குருதெனிய—குருந்துவத்தை

# அருள்மிகு ஸ்ரீ ஆறுகன்னி முத்துமாரியம்பாள் திருப்பொன்னூஞ்சல்

**(வாழி, எச்சரிக்கை, பராக்கு, லாலி, நலுங்கு, ஏசல், முறையீடு, தாலாட்டு, மங்களம்)**



ஆக்கம் :கவிஞர் செல்லத்துரை சுதர்சன்
விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்.

## காப்பு

**பார்கொண்ட ஈழமிசைப் பதியிலோங்கு**
**பல்சீரும் மிகமேவு கண்டிதன்னில்**
**சீர்கொண்ட குருதெனிசேர் குருந்துவத்தை**
**திகழ்குறிஞ்சி வளமேவு சிற்றூர்தன்னில்**
**கார்கொண்ட கங்கைபுகழ் மாவலியின்**
**கரைமேவும் ஆறுகன்னி முத்துமாரி**
**பேர்கொண்ட பொன்னூஞ்சல் பெரிதுற்றோங்கப்**
**பெருவயிற்றுக் கணபதியே காப்புநீயே**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

01. சீர்பூத்த வேதமெலாம் தூண்களாக்கி
திகழ்ஒளிசேர் கலைகளெலாம் நாண்களாக்கி
நேர்பூத்த மந்திரம்வி தானமாக்கி
நெடிதோங்கு யந்திரமே பீடமாக்கி
பார்பூக்கும் பத்தியதே சோலையாக்கி
பரவுதமிழ்ப் பாக்களதே மாலையாக்கி
கார்பூக்கும் ஞானமெனக் கருணையாறு
கன்னிமுத்து மாரியம்பாள் ஆடீரூஞ்சல்

02. அந்திவானச் செந்நிறத்தி னாடைகட்டி
அருளொழுகு விழிகளதில் கருமைதீட்டி
முந்திவரு மூவிலைவேற் சூலமேந்தி
முறுவலதால் முக்குணத்தின் வேரைமாந்தி
பந்தமறு வேப்பிலையைப் பற்றிநன்று
பரவுமடி யாரினுள்ளம் மேவிநின்று
கந்தமலப் பிணியறுக்கும் களிப்பிலாறு
கன்னிமுத்து மாரியம்பாள் ஆடீரூஞ்சல்

3. பொற்சுடரும் பொலிமதியும் கவிகைபற்ற
பொன்னிறஞ்சேர் மலர்களினால் தேவர்போற்ற
நற்றமிழின் தேனிசையை வாணீமீட்ட
நடனமிடு அம்பையூர்வை கவரீகாட்ட
உற்றதிரு மாதுவினால் செல்வம்மேவ
உருகுமிசைப் பண்களினைக் குழல்கள்கூவ
கற்றமனத் துள்ளொளியாய்க் கனியுமாறு
கன்னிமுத்துமாரியம்பாள் ஆடீரூஞ்சல்

4. வலமிடமாய் வள்ளிதெய்வ யானையாட்ட
வனப்புமிகு வீதியிருள் வடுகண்ஓட்ட
நலங்கூடு நற்கலசம் காளீகாட்ட
நவக்கிரக நாயகரே ஏவல்ஈட்ட
பலந்தருசேய் முருகனவன் கைத்தலங்கொட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரதமிடுங் கணபதியே பண்ணினைமுட்ட
கலம்நிறைந்து வாழ்வோங்கிக் களிக்குமாறு
கன்னிமுத்து மாரியம்பாள் ஆடீரூஞ்சல்

5. தண்ணிலவு தாரோங்கு சடையேயாட
தனிநிலவாய் மூக்குத்தி வைரமாட
எண்ணிலவு கொள்தோட்டு யெழிலுமாட
யெனிநிலவாய் யெதுவென்றே வளைகளாட
பண்ணிலவு ஓசைகொளு சிலம்புமாட
பணிநிலவாய்ப் பதமருளும் பாதமாட
கண்ணிலவு கருணையருள் வீசுமாறு
கன்னிமுத்து மாரியம்பாள் ஆடீரூஞ்சல்

6. அங்கமதில் ஆறுகன்னி அமையக்கொண்டாய்
ஆடிதனில் பெருக்குவிழா அதைநீகண்டாய்
பங்கமிலாச் சுமங்கலிகொள் பூஜைநின்றாய்
பவனிவரு தேரெரித்தோர் பதைக்கக்கொன்றாய்
சிங்களத்து அடியவர்க்கும் துணைநீஎன்றாய்
சீர்கண்டி மன்னவர்தம் சிந்தைவென்றாய்
கங்கைதனைக் கொண்டபிரான் கனிந்துஆறு
கன்னிமுத்து மாரியம்பாள் ஆடீரூஞ்சல்

7. சீலமுடைச் சித்தருக்கெண் சீரளிப்பீரே
சீயமதில் வந்துதிரு வாழ்வளிப்பீரே
கோலமுடை யார்மனத்தில் கொலுவிருப்பீரே
கொல்பிறவித் தொல்நோயின் வேரறுப்பீரே
ஞாலமதில் நன்மைமிகு பேறளிப்பீரே
ஞானவின்ப நாடவொளிச் சுடர்விடுப்பீரே
காலமுறு காலனையும் கடியுமாறு
கன்னிமுத்து மாரியம்பாள் ஆடீரூஞ்சல்

8. தேனமுதாய்ச் செந்தமிழைத் தெரியக்கூட்டி
செய்யதிருக் கலையினையே செறியத்தீட்டி
வானமுதாய் வருவணியை வாங்கியொன்றாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமேவு வண்மையது ஓங்கிநன்றாய்

தேனமுதாய் முக்கனிபோற் சுவைபரவ

தேருமிய லிசைநடன அவைவிரவ

கானமுதாய் கவியதனைப் படைக்கவாறு

கன்னிமுத்து மாரியம்பாள் ஆடீரூஞ்சல்

9. பாதமலர் பரவுகின்றோம் பார்ப்பாயோலம்

பாவவினை வாட்டுதம்மா பறிப்பாயோலம்

வாதபிணி வருத்துதம்மா வாங்குஓலம்

வருத்துமம்மை நோயினைநீ வதைப்பாயோலம்

ஏதமெலாம் எங்குளதோ எரிப்பாயோலம்

ஏறுவினை பாறியறச் செய்வாயோலம்

காதவழிக் குற்றதுணை காக்குமாறு

கன்னிமுத்து மாரியம்பாள் ஆடீரூஞ்சல்

10. வீடார்க்கு விரைபவரே ஆடீரூஞ்சல்

வீரமதை விளைப்பவரே ஆடீரூஞ்சல்

தேடார்க்கும் தெரிபவரே ஆடீரூஞ்சல்

தேடியெமைத் தெரிந்தவரே ஆடீரூஞ்சல்

நாடாரின் நல்விளக்கே ஆடீரூஞ்சல்

நனிமுத்தேர் கொண்டவரே ஆடீரூஞ்சல்

காடார்ந்து நடம்புரிவோன் களிக்குமாறு

கன்னிமுத்து மாரியம்பாள் ஆடீரூஞ்சல்

## வாழி

சிவனெறியும் சீர்தமிழும் சிறந்துவாழி

சிவத்தொண்டர் நெறிவாழி சீலம்வாழி

நவமோங்கு கற்பினொடு நன்மைவாழி

நாதவியல் பரதமொடு கலைகள்வாழி

தவநிறைகொள் பசுவாழி பண்ணும்வாழி

தவம்வாழி தண்முகிலும் கடலும்வாழி

கவருமனத் தடியவரின் கன்னல்ஆறு

கன்னிமுத்து மாரியம்பாள் மலரடிவாழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரீக்கை

நற்றாயெனநண்ணும் பெருநலத்தாய் எச்சரீக்கை
நாடும்பல நிதியந்தரு பலத்தாய் எச்சரீக்கை
கற்றோங்கிடு கலைதன்னிலே கனிவாய் எச்சரீக்கை
கவியோங்கிடு சுவையில்நிதம் நனைவாய் எச்சரீக்கை
பெற்றாயெமைப் பேணுந்தகைப் பெரியாய் எச்சரீக்கை
பெருமையுறு மடியார்வினை யெரிப்பாய் எச்சரீக்கை
கற்போங்குநல் அறுகன்னியாம் கனலே எச்சரீக்கை
காத்திடுமுத் துமாரியருட் புலனலே எச்சரீக்கை

## பராக்கு

முன்னைசிவன் வந்தணையும் முதலே பராக்கு
மூலவினை வேரறுக்கும் நுதலே பராக்கு
பின்னைபால கணபதிகொள் அம்மை பராக்கு
பிறவியற நோக்குவிழி யுண்மை பராக்கு
அன்னையுரு வாகியெனை யாண்டாய் பராக்கு
அருங்கவிதை யான்பாடக் கொண்டாய் பராக்கு
கன்னலின ஆறுகன்னிக் கனிவே பராக்கு
காரருள்சூழ் முத்துமாரிக் கடவுள் பராக்கு

## லாலி

பந்தமறு பார்வைகொளு சக்தி லாலி
பார்புகழு பக்திநெறிச் சித்தி லாலி
நந்தவன நாறுமலர் சூடி லாலி
நாவினிலே தமிழ்க்கவிதை பாடி லாலி
எந்தவிடர் வந்திடினும் நீறு லாலி
ஏற்றமுறு ஞானநிலை கூறு லாலி
கந்துமன அருளாறு கன்னி லாலி
கார்பொழில்சூழ் முத்துமாரி லாலி லாலி

## நலுங்கு

வீட்டின்ப நிலையருளும் விண்ணரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீறுபுகழ்த் தமிழ்க்கவிதைப் பண்ணரசி
நாட்டதிலே நலங்காட்டு நல்லரசி
நாடுபவர் பிணிபோக்கும் வல்லரசி
தீட்டுதமிழ்க் கவிதையதன் சுவையரசி
தினம்போற்று மனத்தினிலே அவையரசி
காட்டுமருளா றுகன்னிக் கனிவரசி
கார்வழங்கு முத்துமாரி நனிவரசி

## ஏசல்

செங்கையிடைத் திரிசூலங் கொண்டால்நாளும்
சேர்க்குமருள் நலத்தினுக்கு நீயோஏதம்!
மங்கையெனஉமைநாடி வந்தால்நாளும்
மருட்டியெமை மயக்குவதோ உந்தன்பாதம்!
நங்கையரும் நம்பியரும் கூடித்தேறி
நாடுபதம் தடுப்பதுவோ உந்தன்தாகம்!
கங்கையவன் தலைக்கொண்டே இடத்திலாறு
கன்னிமுத்து மாரியுந்தன் களிப்பின்வேகம்!

## முறையீடு

ஓலமிட்டே நாமுரைத்தோம் முறையீடு
ஒருவார்த்தை நமக்குரைப்பாய் முறையீடு
சூலமதைக் கைக்கொண்டாய் முறையீடு
சுரம்பொழியும் வரங்கொண்டாய் முறையீடு
கோலதிரு யேனெடுத்தாய் முறையீடு
கொண்டபிணி வந்தடுப்பாய் முறையீடு
காலுமுக ஆறுகன்னி முத்துமாரி
கழலிணைக்கு முறையீடு முறையீடு

## தாலாட்டு

ஞானப்பால் கந்தவளே தாலோ தாலேலோ
ஞானமகிழ் பொற்கொடியே தாலோ தாலேலோ
கானத்தால் களிப்பவளே தாலோ தாலேலோ
கவிதந்து சிரித்தவளே தாலோ தாலேலோ
மோனத்தின் திருவுருவே தாலோ தாலேலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோட்சநிலை அருள்பவளே தாலோதாலேலோ
வானத்துப் பெருமருந்தே தாலோ தாலேலோ
வல்லமைகொள் பேரொளியே தாலோ தாலேலோ

முலையெறிந்த முக்கனியே தாலோ தாலேலோ
மூடுபயம் முனிந்தவளே தாலோ தாலேலோ
வலைமாயை அறுப்பவளே தாலோ தாலேலோ
வானவரும் தொழுபவளே தாலோ தாலேலோ
சிலையெதிலும் சீருடையாய் தாலோ தாலேலோ
சிந்தையிலே உறைவுடையாய் தாலோ தாலேலோ
கலைபொழியும் ஆறுகன்னி முத்துமாரி
கண்வளராய் காத்திடுவாய் தாலோ தாலேலோ

## மங்களம்

சொல்லைநிதம் வெல்லவைக்கும் தும்பிக்கைக்கு மங்களம்
சோலைமண இசைபொழிந்த வாணிபதம் மங்களம்
வில்லைநிதம் ஏந்திநிற்கும் வீரர்கட்கும் மங்களம்
விண்ணுலகத் தேவருக்கும் ஞானியர்க்கும் மங்களம்
எல்லையிலா வளஞ்சுரக்கு மழைமுகிற்கு மங்களம்
ஏர்முகத்து உழவருக்கும் உத்தமர்க்கும் மங்களம்
கல்மனதில் கனியுமாறு கன்னியர்க்கு மங்களம்
கண்கள்நிறை முத்துமாரி கழலடிக்கு மங்களம்

-திருப்பொன்னூஞ்சல் முற்றும் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# குருதெனிய குருந்துவத்தை ஸ்ரீ ஆறு கன்னி முத்து மாரியம்மன் தனித்துவமும் மகத்துவமும்



இராசையா மகேஸ்வரன், முதுமாணி நூலகத்தகவல் விஞ்ஞானம்
கல்விசார் முதுநிலை துணைநூலகர், பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை.

## குருதெனிய புவியியல் தரை தோற்ற அமைப்பு

கங்தாய கோரளையின் ஹேவாஹெட்ட கீழ்ப்பிரிவு ஹாரகம கியூலின்ட் மலைஉச்சியும், ஹங்குராங்கெத்த சமவெளியையும், இச்சமவெளி ஊடாக மகாவலி நதியையும், கியூலின்ட் ஓயா (Kiullinde Oya) எனும் கிளைநதியினையும், சமவெளியூடாக மாகாவலி நதிக்குச் சமாந்தரமாகக் கண்டி ஹங்குரான்கெத்த பிரதான வீதியையும் கொண்டதுமான சூழலில் குருதெனிய ஊர் அமைந்துள்ளது. குருதெனிய பிரதேசத்தினைச் சூழ யகுருன்காவேகந்த, வெல்கலேகிரிய, கொல்கொடஹிரிய, மடுகொல்லேஹிரிய, துன்கொல்லேஹிரிய, படகொல்லகந்த, படலஹெனகந்த, கோனாவத்தஹெலகந்த, ஹிலுக்மோதரகலஹிரிய, கெகுலு கொடகந்த ஆகிய மலைகள் அமைந்துள்ளன. குருதெனிய நகர் மேற்கே தலாத்து ஓயவையும் வடக்கே மகாவலி கங்கையினையும் கிழக்கே ஹங்குராங்கெத்த, மேற்கே கண்டியையும் எல்லையாகக் கொண்டு காணப்படுகிறது.

குருதெனிய கிராமம் செங்கடகல தொகுதியில், கங்கவட்ட கோரளைப் பிரதேச சபையின் கீழ் குருதெனிய கிழக்கு, குருதெனிய மேற்கு கிராம சேவகர் பிரிவுகளைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

குருதெனிய நகர்பகுதியில் 1881 இல் 236 குடும்பங்களைச்சேர்ந்த 136 ஆண்களும், 100 பெண்களும் வாழ்ந்து வந்துள்ளனர். 1891 இல் இது 376 குடும்கங்களைச்சேர்ந்த 208 ஆண்களாகவும் 168 பெண்களாகவும் அதிகரித்துள்ளது. கண்டி மன்னருக்குச் சொந்தமான 37 ஏக்கர் நெல்வயல் இங்கு காணப்பட்டுள்ளது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1868 இல் இப்பகுதியில் ஹரியகொல்ஹேன மற்றும் வஹால்கட- கலஹா மஹாவாகெல பகுதியில் காணப்பட்ட வயல்களில் 100 ஏக்கர் ஆளுனரினால் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இப்பகுதியில் காணப்படும் பெலிவின்டில் (Ballywhindle) தோட்டம் 1863 இல் கோப்பித் தோட்டமாகக் காணப்பட்டுள்ளது. அதனை அலெக்சாந்தர் பிரவுன் என்பவர் பராமரித்துச் செய்கை பண்ணி வந்துள்ளார். இவரே புஞ்சி-ஹாரகம தோட்டத்தினையும் (சின்ன ஹாரகம) வாங்கியுள்ளார். 1878 மற்றும் 1889 களில் 29 ஏக்கர் நிலம் தலதாமாளிகைக்குச் சொந்தமாக இருந்துள்ளது. இங்கிருந்து தான் "புதிய நெல்" பூஜைக்கு வழங்கப்பட்டுள்ளது. "புதிய நெல்" பூஜை என்பது அறுவடை நெல் பூஜையாகும். இது குருதெனிய யானைகள் மூலமாகவே தலதாமாளிகைக்கு வழங்கப்பட்டுள்ளது. தலதாமாளிகை யானைகளும் இங்கேயே வளர்க்கப்பட்டள்ளன.

மஹாகும்புர, வீரகோன், மடவல, மூமன், விதான ஹேனயலாகே, வேஹேதென்னகே, கபுகே, ஜம்புரேகொட, காலவத்தகே, கெட்டவலகே, பேராதெனியகே, சட்டம்பிள்ளகே, உள்பென்கே, வத்தேகே, வெதஹேனலயாகே, வீரசிங்க, குருதெனிய புஞ்சிரால ஆகியோருக்கு இப்பகுதி நிலங்கள் சொந்தமாக இருந்துள்ளன.


கண்டி ஹங்குரான்ஹெத்த பிரதான வீதியில் கோனாவத்த கிராமம் என்பதும் குருதெனியவுடன் அமைந்த மற்றொரு இடமாக வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. இதனை "விசால்தொட்ட விசால் நுவர" (Wisaltota-Wisal Nuwara) என்றும் அழைத்துள்ளனர்.

இப்பகுதியில் த சொய்ஸா (De soysa) என்பவருக்கு வரி இல்லாமல் 37 ஏக்கர் நிலம் மன்னரால் வழங்கப்பட்டுள்ளது. இந்நிலத்தினூடாகவே பௌத்தவிகாரையுடன் நீரருவி மகாவலியினை அடைகிறது. இதற்கு எதிர்த்திசையில் மகாவலிக்கு மறுபக்கத்தில் பள்ளேகல தோட்டம் அமைந்துள்ளது. இங்கேயே மன்னர் காலத்தில் நெற்களஞ்சியம் அமைக்கப்பட்டிருந்தது.

1881 இல் இப்பகுதி நிலங்கள் லூவிஸ் பெரேரா 97,943 ஏக்கர்கள், செட்டியார்கள் 50,200 ஏக்கர்கள், ஹலமல்கெஹே 51,180 ஏக்கர்கள், கம்புருபிட்டியகே கருப்பன் முத்து 63, 811 ஏக்கர்கள், மடவல கமஹெலகே 60,289 ஏக்கர்கள், முத்தப்பச்செட்டியாருக்கு ஈரியகாமுல்ல கோப்பித்தோட்டம், நேகட்கே 61,081 ஏக்கர்கள், யக்டஹெ 61, 209 ஏக்கர்கள் நிலமும் சொந்தமாக இருந்துள்ளது. 1823 வரை இவை கண்டி மன்னரது சொத்தாகவே காணப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(200 வருடத்திற்கு முன் கண்டியின் பிரதான வீதிகள்)

கண்டி உடவத்தகல காட்டு அடிவாரத்தில் தலதாமாளிகை அமைந்துள்ள இடத்திற்கு அண்மையில் "செங்கந்தன்" என்ற இந்தியப்பிராமணன் வாழ்ந்து வந்ததாகவும் இவர் சிவனொலிபாதமலையைத் தரிசிக்க வந்த பிராமணன் என்றும் இப்பகுதியில் "நாதர்" கோயிலில் சிவபூஜை செய்தவர் என்றும் இக்கோயிலே பிற்காலத்தில் நாத்த தேவாலயமாகியதாகவும் "செங்கந்தன் புரம்" என அழைக்கப்பட்ட இக்காடு செங்கந்த காடு (செங்கந்த கெல) (கெல-காடு) எனப்பட்டது. இதுவே மருவி செங்கந்த கெல என அழைக்கப்பட்டு செங்கடகல என்றாயிற்று எனக் கூறுகின்றனர். இந்த செங்கந்த (Kanda) கந்த என்பதே கண்டி ஆகியது. காசிச்செட்டி என்பவர் தனது வரலாற்று நூலில் யட்டிநுவர, ஹேவாஹெட்ட, தும்பறை, உடுநுவர, கம்பளை என ஐந்து பிரதேசங்கள் காணப்பட்டதாகவும் இதனை "கந்த பஸ் உடரட்ட" என அழைத்ததாகவும் ஒல்லாந்தர் இதனை 'Kanda' கந்த என எழுதியதாகவும் இது முயனெல என மருவியதாகவும் இதன் பின்னரே "கண்டி" என அழைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழில் மகாநகர் என இப்பகுதியை மக்கள் அழைத்ததால் பின்னர் நகர்-நகர என மாறி பின் நுவர என மருவியுள்ளது. இதன் பின்னர், பிற்காலத்தில் மகாநுவர என அழைக்கப்படலாயிற்று என வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர்.

கண்டியை ஆண்ட மன்னர்களும் காலங்களும் வருமாறு:


| | | |
|---|---|---|
| 1473 – 1511 | விக்ரமபாகு | கம்பளை இராஜதானி |
| 1511 – 1551 | ஜயவீர | கோட்டே இராஜதானி |
| 1551 – 1581 | கரலியத்த பண்டார | கோட்டே இராஜதானி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 1585 – 1591 | முதலாம் இராஜசிங்கன் | கோட்டே இராஜதானி |
| 1592 – 1604 | முதலாம் விமலதர்மசூரியன் | கோட்டே இராஜதானி |
| 1604 – 1635 | செனரத் | கண்டி இராச்சியம் |
| 1635 – 1687 | இரண்டாம் இராஜசிங்கன் | கண்டி இராச்சியம் |
| 1687 – 1706 | இரண்டாம் விமலதர்மசூரியன் | கண்டி இராச்சியம் |
| 1706 – 1739 | நரேந்திரசிங்கன் | கண்டி இராச்சியம் |
| 1739 – 1747 | விஜயராஜசிங்கன் | கண்டி இராச்சியம் |
| 1747 – 1782 | கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் | கண்டி இராச்சியம் |
| 1782 – 1798 | ராஜாதி ராஜசிங்கன் | கண்டி இராச்சியம் |
| 1798 – 1815 | ஸ்ரீ விக்ரம இராஜசிங்கன் | கண்டி இராச்சியம் |

இரண்டாம் விமலதர்மசூரியன் தஞ்சாவூர் மன்னனின் இளவரசியை மணந்ததால் கண்டி இராச்சியத்திற்கு வந்த பல தமிழர்கள், நாயக்கர்கள் வம்சத்தினர் நிலஉரிமையாளராகினர். இந்நிலை 1815 இல் ஆங்கிலேயர்கள் கைப்பற்றும்வரை காணப்பட்டது. இவர்கள் தலதாமாளிகை வீதியில் வசித்தனர். அக்காலத்தில் தலதாவீதி குமாரரூப வீதி எனவும், பின்னர் மலபார் வீதி எனவும் அழைக்கப்படடது. மன்னருக்கான காணிகள் தென்னங்கும்புர முதல் ஹேவாஹெட்ட வரை இக்காணிகள் காணப்பட்டுள்ளன. இக்காலத்தில், மகா நகரை பிரிக்கின்ற வீதி தஸ்கர வீதி எனவும், கொழும்பு வீதி பல்லதெனிய வீதி எனவும் பின்னர், ரிதி வீதி எனவும் அழைக்கப்பட்டுள்ளது. டீ.எஸ் சேனநாயக்க வீதி அதாவது திருகோணமலை வீதி, செட்டியா தெரு என்றே அழைக்கப்பட்டுள்ளது. எனவே, இங்கு தமிழர் செல்வாக்கு காணப்பட்டுள்ளதனை இதன்மூலம் காணலாம். கொட்டுகொடல வீதி, இந்திய கலைஞர்களின் வீதியாகக் காணப்பட்டதால், கவிகார வீதி என்றே அழைக்கப்பட்டுள்ளது.



(200 வருடத்திற்கு முன் கண்டி மாநகரில் இருந்து குருதெனிய வரும் வழியையே படத்தில் காண்கின்றீர்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விக்ரமஇராஜசிங்கன் ஆட்சியின் போது கண்டியில் வாழ்ந்த நாயகர் வம்சத்தினர் ஆங்கிலேயருக்கும், ஆங்கிலேயர் ஆட்சியை ஆதரித்த சிங்களவர்களுக்கும் பயந்து ஹங்குராங்கெத்த, பதியப்பலள்ள, ஆறுகாமம், குருதெனிய பகுதிகளுக்குப் பிரிந்து சென்றுள்ளனர்.

இவ்வாறு சென்ற மன்னரது விசுவாசிகளான தமிழர்கள் பலர் கந்தசந்தி, மைலப்பிட்டி, ஹங்குரங்கெத்த பகுதிகளில் குடியேறினர். இதனால் இப்பகுதிகளில் பிற்காலத்தில் சைவசமயக் கோயில்கள் தோன்றின. கந்தசந்தியில் தேவர் சாதியினரோடு மற்றும் இரு சாதிக் குழுவினர் இவ்வாறு சென்று வாழ்கின்றனர். இவர்களில் பலர் மன்னர் குடும்ப இரத்த உறவினர்கள் என அறியவருகின்றது.



சின்னஆறுகாம முத்துமாரி கோயிலின் வண்ண இயற்கை வளம் சூழ்ந்த காட்சி

**வரலாற்றில் குருதெனிய**



கண்டி தலதா மாளிகைப் பெரகராவில் தந்தத்தில் முத்துக்களைக் கொண்ட முத்துராஜா இன (கஜமுத்து) யானைகளினாலேயே புனித தந்தம் காவிச் செல்லப்படும். இந்த முத்துராஜா இன யானைகளை வளர்க்கும் இடமாகக் குருதெனிய விளங்கியுள்ளது. தோஷம் போக்க யானைகளின் வயிற்றுக்குக் கீழால் குழந்தைகளைக் கொண்டு செல்வர். இதற்காகக் கண்டி மக்கள் குருதெனியவிற்கே வந்து கடனை நிறைவேற்றியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி "எசல பெரகரா"வில் இராச்சியத்தின் கோரளைப் பிரிவுக் கொடிகள் அதாவது "திஸாவ கொடிகள்" கொண்டு செல்லப்படும். இந்த ஒவ்வொரு கோரளைக்கும் ஒரு திஸாவ கொடி கொண்டு செல்லப்படும். இந்த ஒவ்வொரு கோரளையும் ஒரு திஸாவையின் கீழ் நிர்வகிக்கப்பட்டுள்ளன. இதன் போது, குருதெனியவை மையமாகக் கொண்ட ஹேவாஹெட கங்தாய கோரளைக் கொடியும், எசல பெரகராவில் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இந்தக் கொடி "இராவணா கொடி" என அழைக்கப்பட்டதோடு இராவனனின் தலை பொறிக்கப்பட்டுள்ளது.



இராவணா கொடி

கண்டி எசல பெரகராவில் நடனமாடும், மேளம் அடிக்கும் கலைஞர்கள் தலதா மாளிகை நிலங்களில் விவசாயம் செய்வோர். இவர்கள் "ராஜகாரிய" என்றே இதனைச் செய்கின்றனர். குருதெனியப் பகுதியிலேயே அதிக நிலம் தலதா மாளிகைக்குச் சொந்தமாக இருந்ததால் குருதெனியபகுதி மக்கள் பலரே எசல பெரகராவில் கலந்து கொண்டனர்.

கண்டி மன்னர் நரேந்திர ராஜசிங்கன் குண்டசாலையை மையமாகக் கொண்டே ஆட்சி செய்தார். அவரது அரண்மனை பாதுகாப்புக் காரணங்களுக்காக மகாவலி ஆற்றின் அக்கரையிலேயே அமைந்திருந்தது. இந்த மாளிகைக்கு எதிரிகள் வருவதனால் மகாவலி நதியைக் கடந்தே வர வேண்டும். இந்த மாளிகைக்கு எதிர்த்திசையிலேயே குருதெனிய அமைந்துள்ளது. மன்னர் மாளிகையிலிருந்து பார்க்கும்போது ஆறுகாமம் வரை கண்ணுக்குத் தெரிந்த தூரமாகக் காணப்பட்டுள்ளது. அவரது பாதுகாப்பு வலயம் குருதெனியவாகவே இருந்துள்ளது. மன்னரின் மற்றொரு மாளிகை ஹங்குராங்கெத்தயில் இருந்துள்ளது. பாதுகாப்புக் கருதி அங்கேயும் வாழ்ந்துள்ளார். குண்டசாலைக்கும் ஹங்குராங்கெத்தவுக்கும் இடையில் முக்கிய மையமாகவே குருதெனிய காணப்பட்டுள்ளது. அத்தோடு மன்னருக்குத் தேவையான மரக்கறி பயிரிடப்படும் இடமாகவும் இது காணப்பட்டுள்ளது. பிற்காலத்திலும் தென்னக்கும்புர முதல் மைலப்பிட்டியவரை, காய்கறித் தோட்டங்களே காணப்பட்டுள்ளன. 1ம் இராஜசிங்கன் இந்து மதத்தினைத் தழுவியதால் விசனமடைந்த பௌத்த பிக்குகள், சீதவக்கையிலிருந்த புத்தரின் தந்தத்தை, அங்கிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னருக்குத் தெரியாமல் அதனைக் கண்டிக்குக் கொண்டு சென்றுள்ளனர். இதன் பின் 223 வருட காலம் கண்டி மன்னர்களால் புனிததந்தம் பாதுகாக்கப்பட்டுள்ளது. இதன்போது ஐரோப்பியப் படையெடுப்பின்போது, அச்சம் காரணமாகப் புனிததந்தம் ஹங்குராங்கெத்தவுக்குக் கொண்டுசெல்லப்பட்டு, ஹங்குராங்கெத்தவில் பெரகரா நடத்தப்பட்டுள்ளது. இதன்போது குருதெனிய கோனாவத்த பௌத்தவிஹாரையிலும் புனித தந்தம் பாதுகாக்கப்பட்டுள்ளது. ஹங்குராங்கெத்தவை, வரலாற்றுப் பதிவுகளில் ''தியதிலக்க நுவர'' என்றும் ''மந்தாரம் புர'' என்றும் குறிப்பிடுகின்றனர்.

குருதெனிய வைத்தியர்கள் (சிங்கள வைத்தியம்) கண்டி இராச்சியத்தில் மத்திய மாகாணத்தில் அரச காலம்தொட்டே பெயர் பெற்றவர்களாக இருந்துள்ளனர். கை, கால் முறிவு, உடைவு, மூட்டு கழருதல், மூட்டு வியாதிகள் ஆகியவற்றிற்கு இவர்கள் சிறந்த வைத்தியர்களாகக் கருதப்பட்டனர். குருதெனிய வைத்தியர்கள் எட்டுப் பரம்பரையாக இதனைச் செய்து வருகின்றனர். இதனால் இவற்றிற்குக் குருதெனிய பிரசித்தம் பெற்ற இடமாகக் காணப்படுகின்றது.வைத்தியர்களில் தேர்ச்சி பெற்ற குருவானவர்கள் (குருநான்சே) இருந்த இடம் என்பதால் குருதெனிய ( குரு – தெனிய) என இடப்பெயர் ஏற்பட்டதாகவும் கருதுகின்றனர்.

## இலங்கையில் பெண் தெய்வவழிபாடும் குருதெனியாவும்

இலங்கையில் மலையகத்தில், குறிப்பாகக் கண்டிப்பகுதியில் மரத்தினால் செய்யப்பட்ட அம்மன் சிலை பற்றிய வரலாறுகள் காணப்படுகின்றன. கண்டி எசல பெரகராவில் ஐந்தாவது ஊர்வலமாக பத்தினி தேவாலய பெரகரா செல்கிறது. கண்ணகி குழந்தையாகப் பேழையில் மிதந்து வந்ததைக் கண்ட மாநாயக்கன் செட்டியார் கண்ணகியை எடுத்து வளர்த்து, கோவலனுக்கு திருமணம் செய்து வைத்தார். கோவலன் மாதவியுடன் ஏற்பட்ட தொடர்பினால் செல்வம் அனைத்தினையும் இழந்து மீண்டும் கண்ணகியிடம் தஞ்சமடைந்தான். கண்ணகி தனது காற்சிலம்பினைக் கொடுத்து மீண்டும் வியாபாரம் செய்யத்தூண்டவே அச்சிலம்பினை விற்கசென்ற கோவலன் பாண்டிய மகாராணி தொலைத்த சிலம்பென பாண்டிய மன்னரால் கள்வனெனப் பிடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டான். நீதி கேட்ட கண்ணகி தனது மறு காற்சிலம்புடனும் விரித்த தலையுடனும் பாண்டியனிடம் நீதி கேட்டு தனது சிலம்பினை உடைத்து கோவலன் கொண்டு வந்தது தனது மறு சிலம்பென்பதை நிரூபித்து, கோபம் கொண்டு தனது மார்பில் ஒன்றினை திருகி எறிந்து, மதுரையை எரித்து, பின்னர் மலையேறி மறைந்தாள். இதனைச் செங்குன்றக் குறவர்கள் கண்டதாகச் சிலப்பதிகாரம் கூறுகிறது. எனவே, மன்னன் செங்குட்டுவன் கண்ணகிக்குச் சிலை செய்தான். சிலை பிரதிஷ்டை விழாவில் இலங்கை மன்னன் கஜபாகுவும் கலந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டான். மன்னன் இலங்கைக்குத் திரும்புகையில் சந்தன மரத்திலான கண்ணகி சிலையினை இலங்கைக்குக் கொண்டு வந்தான். அதனை வடபுலக் கடற்கரையிலிருந்து யானைமீது ஊர்வலமாகக் கொண்டுவந்து, கண்டியில் பத்தினி தேவாலயத்தில் பிரதிஷ்டை செய்தான். இதனை, "கடல்சூழ் இலங்கைக் கஜபாகு வேந்தனும்" என (வரந்தரு காதை 160-164) எனும் சிலப்பதிகாரத் தொடரால் அறியலாம்.

கஜபாகு மன்னரே இலங்கையில் முதல் பெண்தெய்வ வழிபாட்டினை ஏற்படுத்தினார். பூம்புகாரில் கொண்டாடப்பட்ட இந்திரவிழாவில் சிவன் கோவில், குமாரக்கோட்டம், திருமால்கோட்டம், பலராமன் கோட்டம் ஆகிய கோயில்கள் கலந்து கொண்டன. இதனைப் பார்த்தே கஜபாகு மன்னன் இலங்கையில் நாத்த, விஷ்னு, கதிரேசன், பத்தினி கோயில்களின் "பெரகரா"வை ஆரம்பித்தான் என்பது வரலாறு. இந்தப் பின்னணியினுடாகவே கண்டியில் பெண்தெய்வ வழிபாட்டின் ஆரம்பத்தினையும் அதன் முக்கியத்துவத்தினையும் அறியமுடிகிறது. இதன்பின் தோட்டத்தொழிளாளர்கள் இலங்கைக்கு வரும்போது அம்மன் வழிபாட்டினைக் கொண்டுவந்ததாகக் கூறப்படுகிறது. இதனாலேயே மலையகத்தில், பலபகுதிகளிலும் அம்மன் வழிபாடு தோன்றிப் பரவியுள்ளது. இன்று இலங்கையில் பல கண்ணகி கோயில்கள் சமஸ்கிருதமயமாக்கப்பட்டு ஆகம விதிமுறைக்கு உட்பட்ட கோயில்களாக மாற்றப்பட்டுள்ளன. கண்ணகிக்கு ஆகம முறை சார்ந்த பத்ததியோ அல்லது சிற்ப சாஸ்திரம் தொடர்பான படிம இலக்கணமோ இல்லை. சமூக மாற்றம் காரணமாக கண்ணகி ஆலயங்கள் புவனேஸ்வரி ஆலயங்களாகவும், அம்பாள் ஆலயங்களாகவும் பெயரிடப்பட்டு மாற்றப்படுகின்றன. கண்டியில் பத்தினி கோயிலுக்கு மன்னனால் கொண்டுவரப்பட்டது, சந்தனமரச்சிலை எனக் கூறப்படுவது போலவே குருதெனிய கோயில் மூலஸ்தானத்திலும் சந்தன மரத்திலான அம்மன்சிலை காணப்படுவது சிறப்பம்சமாகும்.

**இந்தியத் தமிழர் வருகையும் நாடார்களும் குருதெனியவும்**

ஐரோப்பியர் வருகைக்கு முன்னர் திரைகடல் ஓடித் திரவியம் தேடவும், மன்னர் ஆட்சிக் காலத்தில் ஆளுகையை விரிவுபடுத்தவும் இலங்கைக்கு இந்தியத் தமிழர்கள் வந்துள்ளனர். இலங்கை மன்னர்கள் இந்திய இளவரசிகளைத் திருமணம் முடித்ததால் அவ் இளவரசிகள் தமது சுற்றத்தாருடன் இலங்கைக்கு வந்துள்ளனர். ஆரியரான விஜயன் 700 நண்பர்களுடன் இலங்கை வந்து இங்கே குடியேறி மன்னரானார். 7ம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டில் பாண்டிய மன்னரது வேலைக்காரப் படையில் 15000 பேர் இலங்கை வந்ததாக மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது. எல்லாளன் துட்டகாமினியால் தோற்கடிக்கப்பட்டபோது எல்லாளனின் மருமகன் வல்லுகன் 6000 படை வீரருடன் மாந்தோட்டம் வந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. குலோதுங்க மன்னரின் படை இலங்கை வந்து வெற்றிபெற்றுக் குடியேறிய வரலாறு கலிங்கத்துப் பரணியில் கூறப்படுகிறது. கண்டி இராச்சியத்தினை நாயக்கர்கள் ஆண்டபோது பலர் இலங்கை வந்து கண்டியில் குடியேறியுள்ளனர். இந்திய நாட்டினை சேர, சோழ, பாண்டியன் என மூவேந்தர்கள் பிரித்து ஆண்டனர். கொற்கை, காயல் துறைமுக நகரங்களாகின. மார்க்கோபோலோ காயல் துறைமுகம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். சோழரைப் பாண்டியர் வென்றார். பாண்டியரை நாயக்கர் வென்றனர். 14ம் நூற்றாண்டு முகமதியர் கைப்பற்றினர். 16ம் நூற்றாண்டில் தெலுங்கு நாயக்கர் கைப்பற்றினர். இதனோடு இராமநாதபுரம், திருநெல்வேலி நாயக்கர்கட்டப்பாட்டுக்கு வந்தது.

விஸ்வநாத நாயக்கர் (1529 – 1564) தனது ஆட்சியை 72 பாளையங்களாகப் பிரித்தார். இதில் 72 தளபதிகள் பாளையங்காரர்களாக நியமிக்கப்பட்டனர். பாளையங்காரர்களுக்குப் படைகளும், பாசறைகளும் இருந்தன. 18ம் நூற்றாண்டில் பாளையங்காரர்கள் ஆட்சி கர்நாடக நவாப்களிடம் மாறியது. திருச்சிராப்பள்ளி வரை இந்த நிலை காணப்பட்டது. நவாப்களிடம் தப்புவதற்குப் பாளைக்காரர்கள் "காவல்" அமைத்தனர். இந்தக் காவல்காரர்களுக்கு நிலத்தின் அளவின் அடிப்படையில் காவல் பணம் கொடுத்தனர். நவாப்களே ஆங்கிலேயரை அழைத்து ஆட்சியைக் கைப்பற்றக் கோரினர். 1791ல் ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பனி, பாளையக்காரர்களுக்கு எதிராகப் பாளையங்கோட்டையைத் தாக்கி ஆங்கிலப் படையை நிறுத்தியது. இறுதிப் போர் பாஞ்சாலங் குறிஞ்சியில் பாளையக்காரர்களுக்கான கட்ட பொம்ம நாயக்கரை எதிர்த்து நடைபெற்றது. நாவாப்களிடமிருந்து வரி பெற்ற பின் 1790ல் கிழக்கிந்தியக் கம்பனியே ஆட்சியைத் தனதாக்கியது. பாளையக்காரர்களை ஜமீந்தார்களாக நியமித்தது. 1801ல் கலெக்டர் நிர்வாகப் பொறுப்பு ஏற்பட்டது. இதன்போது பாளையங்கள் பல ஒன்றிணைக்கப்பட்டு திருநெல்வேலி மற்றும் இராமநாதபுர மாவட்டங்களாக்கப்பட்டன. இதன்பின் இவை நெல்லை மாவட்டம் என அழைக்கப்பட்டு, பின்னர் கன்னியாகுமாரி மாவட்டமும் உருவாக்கப்பட்டது. திருச்செந்தூர், ஸ்ரீ வைகுண்டம் பகுதியில் மணல் நிறைந்த தேரிகள் காணப்படுகின்றன. இத் தேரிகள் தோட்டப் பயிர்களுக்கு உகந்த இடமாகும். இத்தேரிப் பகுதிகள் நாடார்கள் ஆட்சியில் இருந்துள்ளன. இப்பகுதி பனைவளம் நிறைந்த பகுதி. பனம்பொருள் தொழிலை இம் மக்கள் மேற்கொண்டிருந்தனர்.

சோழநாட்டிலுள்ள காவேரிப் பகுதி, மதுரை, தென் திருவான்கூர் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதிகளில் நாடார்கள் தோன்றியதாகக் கூறப்பட்டு வருகிறது. இவர்கள் பூர்வீகமாக இலங்கையின் வடக்குக் கடற்கரையோரத்திலிருந்து வெளியேறி, இத்தேசத்திற்கு வந்ததாக வரலாற்றாய்வாளர்கள் ரொபாட் கால்டுவெல் கூறுகிறார். அவர், திருவாங்கூரில் தென்னைப் பயிரினைச் செய்துவரும் ஈழவர்கள் இலங்கையிலிருந்து குடியேறியோரெனக் கூறுகிறார். கால்டுவெல் கருத்துப்படி இலங்கை யாழ்ப்பாணத்திலிருந்த ஒரு பகுதியினர் நாடார் என அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ராமநாதபுரம் வழியாகப் பனைமர வித்துகளுடன் திருநெல்வேலி மாவட்டத்தில் மணல்பாய்ந்த தரிசு நிலமான தென்கிழக்குப் பகுதியினை வந்தடைந்துள்ளனர். இந்த மணல் நிலத்தினை மானாடு என அழைத்துள்ளனர். இதன் உரிமையைப் பாண்டிய மன்னர்களின் நாடார்களுக்கு அளித்துள்ளனர்.

உலகில் புலம்பெயர்ந்த தமிழர்களின் வரலாற்றில், இலங்கைக்குப் புலம்பெயர்ந்த இந்தியத்தமிழர்கள் முக்கிய இடம் பெறுகிறார்கள். இலங்கைக்குப் புலம்பெயர்ந்த இந்தியத் தமிழர்களை இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளின் காலனித்துவ காலத்துக்கு முன் புலம்பெயர்ந்த இந்தியத் தமிழர்கள் எனவும், காலனித்துவ காலத்தில் புலம்பெயர்ந்த இந்தியத் தமிழர்கள் எனவும் பிரித்து ஆராயலாம். ஐரோப்பியர் ஆட்சிக்காலத்தில் இந்தியத்தமிழர்கள் இலங்கைக்குத் தொழிலுக்காகக் கூட்டிவரப்பட்டனர் அல்லது புலம்பெயர்ந்தனர். பாதையமைக்க, பாலங்களமைக்க, குளங்களமைக்க, புகையிரதப் பாதைகளமைக்க மற்றும் பெருந்தோட்டத்துறைக்கும் இவர்கள் பயன்படுத்தப்பட்டனர்.

இக்காலத்தில் இந்தியாவில், தமிழ்நாட்டில் ஏற்பட்ட பஞ்சம், வறுமை, பட்டினி, நிலவுடமையில் ஏற்பட்ட மாற்றங்கள், அடிமைவாழ்க்கை, வாடகை, ரயத்து வாறிமுறை என்று கூறப்படும் ஒரு கிராமத்தினை அல்லது நிலப்பரப்பினை அரசாங்கத்திற்கு நிலவரி செலுத்திப் பெற்றுக்கொண்ட மிராசுதாரின் ஆதிக்கத்திலிருந்த நிலத்திற்கான அடிமைகள் முறை, சாதிக்கொடுமை, 1677ல் கொண்டுவரப்பட்ட இந்தியபருத்திக்கான சுங்கவரி, 1696ல் கொண்டுவரப்பட்ட பட்டுக்கான சுங்கவரி, விவசாயத்தில் ஏற்பட்ட தேக்கம், பணமின்மை, நிலவரி, கடன் பத்திரத்தால் காணி இல்லாமை ஆகிய பொருளாதார காரணங்களால் அடிமைகளாக நீண்ட காலங்களாக நடத்தப்பட்டமையும், கங்காணிகளின் தூண்டுதல்கள் போன்ற காரணிகள் மக்கள் புலம்பெயர்வதற்குக் காரணமாயின. மறுபுறம் இலங்கையில் மலையகத்தில் தேங்காயும் மாசியும் நிறைந்திருப்பதாகவும் சுபீட்சமான வாழ்வு பற்றியும் ஆங்கிலேயர் தமிழர்கள் மூலமே பிரச்சாரம் செய்து ஒப்பந்தமுறையிலும், சிலர் கங்காணிகளினாலும், சிலர் துண்டுமுறை மூலமும் கூலிகளாக இலங்கைக்குக் கூட்டிவரப்பட்டனர். 1802-1812, 1865-1888 காலப்பகுதியில் இந்தியாவில் ஏற்பட்ட பஞ்சம் இவர்களை பல நாடுகளுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம்பெயர்ந்து செல்லும் சூழலை ஏற்படுத்தியது. இலங்கை ஆளுநர் பிரவுண்றிக்நோத் காலத்தில் (1798-1802) 30,000 பவுன் செலவில் இந்தியத்தொழிலாளர்களை இலங்கைக்குக் கூட்டிவரத் தொடங்கியுள்ளனர். இவர்களே "பயினியர் ரோட் கோப்ஸ்" என அழைக்கப்பட்டனர். 1818 இல் இலங்கையில் ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்ச்சியை அடக்குவதற்காக 5000 தென்னிந்தியர் கொண்டுவரப்பட்டனர், அவர்களே பாலங்கள், ரயில் பாதைகள் ஆகியன அமைத்தனர். இலங்கையில் கம்பளை, பேராதனை, களுத்துறை, கட்டுகஸ்தோட்டை முதலிய பாலங்களை இவர்களே கட்டினார்கள்.

1796ல் பிரித்தானியர் இலங்கைக் கடற்கரையினைக் கைப்பற்றியபோது வரி சேகரிப்பதற்காக இருமொழி தெரிந்த இந்திய சென்னைத் தமிழர்கள் கொண்டுவரப்பட்டனர். இவர்கள் துவிபாஷிகள் என அழைக்கப்பட்டனர். இந்தியப் பரவர்கள் என்ற இனத்தவர்கள் போர்த்துக்கேயர்கள் காலந்தொட்டு இலங்கையில் குடியேறினர். வட்டிக்கடை, அடவுக்கடை நாட்டுக்கோட்டை செட்டியார்களும் ஐரோப்பியர் வருகைக்கு முன்னரே இலங்கைக்கு வந்துள்ளனர். இவர்களைச் செட்டி எனவும் நாட்டுக்கோட்டை நகரத்தார் எனவும் அழைத்தனர். செல்டன் ஹென்றி / போட் 1823ல் கம்பளை சிங்கப்பிட்டியவில் கோப்பித்தோட்டத்தினை ஆரம்பித்தார். இதற்காகப் (14) பதின்னான்கு குடும்பங்களைத் தென்னிந்தியாவிலிருந்து வரவழைத்தார். 1822இல் மேலும் (16) பதினாறு குடும்பங்கள் வரவழைக்கப்பட்டன. இலங்கை தேசாதிபதி எட்வேட் பாண்ஸ் (1821 -1831) காலத்திலேயே இது நடைபெற்றது. கண்டி, கன்னொருவை, அம்பகமுவ, தும்பரை, கொத்மலை, புசல்லாவ ஆகிய இடங்களில் கோப்பித் தோட்டங்கள் அமைத்தனர். இங்கு கண்டிச்சிங்களவர் வேலை செய்யமறுத்ததால் தென் இந்தியத் தமிழ் மக்கள் அழைக்கப்பட்டனர். இவ்வாறு இந்தியத்தமிழரின் வருகை 1842ல் 14,000, 1843ல் 31,000, 1844ல் 67,000, 1845ல் 71,000, என அதிகரித்துச் சென்றுள்ளது. 1873ல் தேயிலைப் பயிர்செய்கை லூல்கந்துரவில் ஆரம்பிக்கப்பட்டது. 1850ல் கொக்கோ பயிர்ச்செய்கை கம்பளையில் ஆரம்பிக்கப்பட்டது.

இக்காலத்தில் கங்காணிமார்களே தரகுப்பணம் பெற்று தொழிலாளர்களைக் குடும்பம் குடும்பமாகக் கூட்டிவந்தனர். 1904 லிருந்து கரையோர ஏஜன்சி நிலையம் மூலம் இவர்களது வரவுபதியப்பட்டுள்ளது. இவர்கள் கப்பல், படகுகள் மூலம் பாபன்-மன்னார், தூத்துக்குடி-கொழும்பு, தொண்டி-கொழும்பு ஊடாக வந்துள்ளனர். காற்று புயல் காரணமாக பலர் வழிதவறியதோடு வேறு இடங்களிலும் வந்து சேர்ந்தனர். இவர்கள், நகரச்சுத்திகரிப்புத் தொழிலாளர்களாக, துறைமுகக்கூலிகளாகத் தொடர்ந்தும் இலங்கைக்குக் கூட்டிவரப்பட்டனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஆண்டு | தோட்டத்தொழிலாளர் | மொத்தம் |
|---|---|---|
| 1917 | 46,267 | 46, 881 |
| 1918 | 44,010 | 41, 431 |
| 1919 | 12,195 | 53, 360 |
| 1920 | 45,912 | 57, 809 |
| 1921 | 25,344 | 52, 132 |
| 1922 | 76,106 | 47, 740 |
| 1923 | 96,289 | 42, 240 |
| 1924 | 153,989 | 53, 106 |
| 1925 | 125,585 | 60, 663 |

ஆதாரம் : மண்டபம் முகாம் அறிக்கை

இவர்கள் "கூட்டுத்துண்டு" முறை மூலம் கூட்டிவரப்பட்டுள்ளனர். அதாவது கங்காணி வழங்கும் முற்பணததிற்கான துண்டு, இந்தப் பணத்தினைச் செலுத்தி இத்தொழிலாளர்களை வேறு தோட்டத்துக்குப் கூட்டிச்செல்ல முடியும். 1921வரை இம்முறை காணப்பட்டுள்ளது. இங்கு கங்காணி வட்டிக்குப்பணம் கொடுப்பார், கடை நடத்துவார். அவரது கடையிலேயே பொருட்கள் வாங்க வேண்டும். அவரே திருமணம் செய்து வைப்பார். அரசியலைக் கவனிப்பார். எனவேதான் இம்மக்களது வாய்மொழிப்பாடல்கள் கங்காணியை மையமாகவைத்து உருவாகியுள்ளன. இவை நையாண்டிப் பாடல்களாவும் காணப்படுகின்றன. இப்பாடலை உருவாக்கியவர் தேர்ந்த புலவர்களோ, செம்மொழிபாவலர்களோ இல்லை. கல்லாமல் கவிபாடும் திறன்கொண்ட பாமரர்களே, இவ்வகை நாட்டார்பாடல்களைப் பாடியுள்ளனர்.

“சிலோன் புளுபுக்” நூலில் 1864 ல் பிரிட்டிஸ் ஆட்சியின் கீழ் இந்தியாவிலிருந்து 2079 கலங்களும், பிரேஞ்சு இந்தியாவிலிருந்து 175 கலங்களும் வந்தன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1848இல் புகையிரதப்பாதை ஆரம்பிக்கப்பட்டபோதும், எண்ணூறு (800) இந்தியத்தொழிலாளர்கள் கூட்டிவரப்பட்டுள்ளனர். கடலில் படகு சரிந்து பலர் இறந்துள்ளனர். பாம்புக்கடியினாலும், மலேரியா காய்ச்சலினாலும் பலர் இறந்துள்ளனர். “ஆதிலட்சுமி” என்ற கப்பல் நீரில் மூழ்கி 120 பேர் இறந்துள்ளனர். கடற்கரையிலிருந்து தோட்டங்களுக்கு வந்து சேருமுன்பாகவும் பலர் இறந்து உள்ளனர். 1847-1867 வரை 24 சட்டங்கள் புலம்பெயர்வுக்காகக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதில் 1858ல் இமிகிரேஷன் சட்டம், 1859ல் ஒப்பந்தத்தொழிலாளர் சட்டம் ஆகியன குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டவர்கள் லயங்களிலேயே (10X10 அடி அறைகள்) தங்கவைக்கப்பட்டனர். இந்த லயங்களே இவர்களது நிரந்தர வீடாகியது. இவ்வாறு வந்தவர்கள் செங்கல்பட்டு, மதுராந்தகம், வடஆற்காடு, சேலம், தென்னாற்காடு, திட்டிவனம், திருச்செந்தூர், சிதம்பரம், நாமக்கல், கோணம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, பாபநாசம், அறந்தாங்கி, புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய பகுதிகளிலிருந்து வந்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்காக 1847 தொடக்கம் 1867 வரை இலங்கைக்கு குடிபெயர்ந்தவர்கள் ஒழுங்காகக் கவனிக்கப்படுவர் என 24 சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 1859 இல் ஒப்பந்த தொழிலாளர்கள் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. 1889 இல் வேலை, ஊதியம், சம்பளத்திகதி நாட்கள் பற்றிச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இக்காலகட்டத்திலேயே 1874ல் காலனியாகமாறிய பீஜித் தீவுக்கு 1879 இலிருந்து 1916 வரை 87 கப்பல்களில் 65,000 பேரை கொண்டு சென்றுள்ளனர். இவர்கள் கரும்புத்தோட்டத்தில் வேலைக்காகக் கூட்டிச்செல்லப்பட்டவர்கள். இக்காலத்திலேயே மலேசியாவிற்கு இறப்பர்தோட்டத்தில் வேலைசெய்ய (17) பதினேழு இலட்சம்பேர் கொண்டு செல்லப்பட்டனர். இங்கு இவர்களுள் அகம்படியார், அம்பட்டர், அம்பலகாரர், ஆசாரி, இடையர், ஓட்டர், கம்மாளர், கவுண்டர், கள்ளர், குறும்பர், தோனார், சக்கிலியர், சாணார், செட்டி, தேவர், நாடார், நாயர், நாயுடு, பள்ளர், பறையர், பண்டாரம், வண்ணார், மறவர், முத்துராசா, முதலி, வடுகண்ணார், வலையர், வள்ளுவர், வேளாளர் ஆகிய சாதிகளைச் சேர்ந்த மக்கள் வந்துள்ளனர்.

இம்மக்களது தாய்வேர்களான மதநம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், கலைகள், ஆகியவற்றில் தென்னிந்தியாவின் பூர்வீகஇடங்களிற் காணப்பட்ட பண்பாட்டின் வேர்கள் காணப்படுவதைக் காணலாம். ஒருவரின் பிறப்பு முதல் இறப்பு வரையான சமயசடங்குகளுடன் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், பின்னிப்பிணைந்துள்ளன. வெளியுலகத்தொடர்பற்றுத் தனிமை, மழை, மலைகள் காரணமாகக் கடுங்குளிர், காற்று, தொற்றுநோய்கள், பசிபட்டினி, துயரங்கள் போன்றன சமயநம்பிக்கைகளுக்குப் காரணமாக அமைந்தன. இவர்களிடத்தே குலதெய்வங்கள், குடும்ப தெய்வங்கள், சிறுதெய்வங்கள் என வழிபாட்டு முறைகள் காணப்பட்டன. மாரியம்மன், பத்தினியம்மன், சிவபெருமான், உமாதேவியார், காளி, காயத்திரி, சரஸ்வதி, விநாயகர், முருகன், இராமர், சீதை, அனுமான், கிருஷ்ணர், நாராயணன், சபரிமலைஐயப்பன், மாரியப்பன், காமாட்சி, ஏழுகன்னிகைகள் ஆகியவற்றைப் பெருந்தெய்வங்களாகவும், மதுரைவீரன், மாடசாமி, முனியாண்டி, ரோதைமுனி, காட்டுமுனி, தவறணைமுனி, கருப்பன்சாமி, வேட்கைகறுப்பன், செண்டாகட்டி, கவ்வாத்துசாமி, மின்னரடயான்,மலைச்சாமி, வைரவர், இடும்பன், வனத்து சின்னப்பர், அந்தோனியார், மரியாள், சூசையப்பர், மாயாண்டி, சங்கிலிகறுப்பு, கறுப்புத் தெய்வம், சுடலைமாடன், உத்தரகாளி ஆகியவற்றைச் சிறு தெய்வங்களாகவும் குலதெய்வங்களாகவும் கொண்டுள்ளனர். ஆடு, கோழி பலியிட்டும், சுருட்டு சாராயம் படைத்தும் வழிபடுகின்றனர். சிறு தெய்வவழிபாடு காளி, அம்மன் வழிபாடாக மாறிவருகின்றது. பூசாரிமுறை மாறி பிராமணர்கள் முறையும் பூசகர்முறையும் நடைமுறையிலுள்ளது. நகர்ப்புற கோயில்கள் ஆகமவிதிப்படி காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நாடார் சமூகத்தினர் பிராமணர்களால், தெலுங்கு நாயக்கர்களினால், ரெட்டியார்களால், மறவர்களால் துன்பப்பட்டதால் இந்து மதத்தினைவிட்டுப் பலர் கிருஸ்தவர்களாயினர். பனை மரங்கள் பயிரிடுதல், பதனீர் இறக்குதல் நாடார்களின் ஆரம்பகாலத் தொழிலாகக் காணப்பட்டாலும் பிற்காலத்தில் நிலச்சுவான்களாக, தோட்ட உறிமையாளர்களாக, கிராமங்களைத் தமதாக்கிக் கொண்டவர்களாக, வணிகர்களாக வளர்ச்சி கண்டனர். பாண்டிய மன்னர்கள் நாடார்களை வரி வசூலிக்க நியமித்தனர். நாடார்கள் தமது வேலைகளுக்குப் பள்ளர்களையும், பறையர்களையும் விலைக்கு வாங்கியுள்ளனர். திருச்செந்தூர்க் கோயிலில் காயாமொழி ஆதித்தன் என்ற நாடார் மண்டபத்தைக் கட்டிக்கொடுத்ததோடு கோயில் செலவுகளையும் பொறுப்பேற்றுள்ளனர். இக்குடும்பம் தேர்த்திருவிழாவில் நாடாவை முதலில் தொட்டு தொடங்கி வைக்கும் உரிமையைப் பெற்றிருந்தது.

1950 களில் சாதிப்பிரிவினை காரணமாகப் பலர் மீண்டும் கிறிஸ்தவர்களாகினர். நாடார்கள் மதமாற்றத்தினால் பல சிறுசாதிப் பிரிவுகளாக உருவாகின. கருக்கு பட்டையர், மேல் நாட்டார், நட்டாத்தி, பேட்ஸ் கொடி கால், சேர்வை போன்ற பிரிவுகள் உருவாகின. இதனால் உயர் நாடார்கள் அசல் நாடார்கள் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர்.

1924ல் சேலம் விபரச்சுவடிகளில் கொங்கு நாடார், தஞ்சாவூர் நாடார் என பிரிவுகள் குறிப்பிடப்பட்டுள்ளது. 1834ல் இலங்கை அரசாங்க விபரச் சுவடியில் நாடார்களின் ஏழு பிரிவினர் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் இடம் பெயர்ந்து சென்றபோது "பிடி மண்" எடுத்துச் சென்று குடியேறிய இடங்களில் கோயில்கள் கட்டினர். பூதவழிபாடு நாடார்களிடம் காணப்படுகிறது. இராமனைப் பேய் என விபரிப்பதன் மூலம் பிராமண எதிர்ப்பைக் காட்டுவதோடு ஆடிமாத முதல் திகதியை இராவணன் சீதாவைச் சிறைப் பிடித்த நினைவு தினமாக விழாக் கொண்டாடுகின்றனர். குருதெனிய அம்மன் கோயிலின் வரலாற்றிலும் ஆடிப்பெருவிழாச் செய்வதன் மூலம் நாடார்கள் அதனைத் தமது கோயிலாகக் கருதியதால் இவ்விழா ஏற்பட்டதா? என்பதும், ஹேவாஹெட்ட திஸாவ கொடியாக இராவணன் கொடியைக் கொண்டதால் இங்கு நாடார்கள் குடியேறினரா? என்பதும் நாடார்கள் செல்வாக்கினால் இராவணன் கொடி உபயோகிக்கப்பட்டதா? என்பதும் ஆய்வுக்குரிய விடயங்களாகும்.

இராவணனின் பிரதம அமைச்சர் மகேந்திர நாடார் சமூகத்தவர் என நம்புகின்றனர். பத்திரகாளி நாடார் சமூகத்தின் அதிஷ்ட தேவையாகும். நாடார்கள் பத்திரகாளி மைந்தர்கள் என்றே தம்மை அழைக்க முயல்கின்றனர். திருநெல்வேலி மாவட்டத்தில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறிய பலரும் நாடார்களாவர். கிறிஸ்தவ




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடார்கள் மத்தியில் கல்வி, பொருளாதார மாற்றங்கள் விரைவாக ஏற்பட்டன. இலங்கையிலும் தேயிலை கோப்பி அறிமுகம் செய்யப்பட்டபோது கருப்பட்டி உற்பத்தியாளர்களாக இவர்களது வர்த்தகம் சிறப்புப்பெற்றது. பின்னர் ஏற்பட்ட வீழ்ச்சியினால் திருநெல்வேலி இராமநாதபுர நாடார்கள் இலங்கைக்குத் தோட்ட வேலையாளர்களாகச் சென்ற ஏனைய சமூகத்துடன் இணைந்து சென்றனர். நாடார் பெண்கள் மேலாடை அணிதல் தொடர்பான வழக்கு காணப்பட்டபோது, 1859ல் சந்தையில் நாடார் பெண்ணின் அங்கியை அகற்ற முற்பட்டபோது ஏற்பட்ட கலவரத்தினால் நாடார்களுக்கும் நாயக்கர்களுக்கும் சண்டை ஏற்பட, இக்கலவரத்தில் நாடார்கள் தாக்கப்பட்டனர். இதனால் பலர் இலங்கைக்குக் குடிபெயர்ந்துள்ளனர். இதன்பின் இந்த நாடார்கள் கிறிஸ்த்தவர் நாடார்கள் என்றும், இந்துக்கள் இந்து நாடார்கள் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். இந்திய தமிழ் நாட்டில் சிவகாசி, தூத்துக்குடி ஆகிய நகரங்கள் நாடார்களின் வர்த்தகச் செல்வாக்குப் பெற்ற நகரங்களாக உருவாகின. அரும்புக்கோட்டை, விருது நகர், சாத்தங்குடி, திருமங்கலம், சிவகாசி ஆகியன நாடார்களது முக்கிய வர்த்தக நகரங்களாகின. 1910ல் நாடார் மகாஜன சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நாடார் மகாஜன சங்க எதிர்ப்புப் பிரசாரம் செய்தது. நாடார் பரம்பரைத் தொழில்கள் என்ற நிலையை மாற்றி அமைத்தனர்.

1960களில் நாடார்கள் ஒன்றிணைந்து தூத்துக்குடி மகாநாட்டில் தமது சமூகத்தடன் பனைமரம் பின்னி பிணைக்கப்பட்டுள்ளது பெருமையையும், பனைமரம் ஆகாயம் வரை உயர்வதால் நேர்மையையும், தலை நிமிர்வையும் குறிப்பதாகத் தீர்மானித்துள்ளனர். 1947ல் அரும்புக்கோட்டையில் செந்திக்குமார நாடார் கல்லூரி, விருது நகரிலும், சிவகாசியிலும் அய்யநாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, மதுரையில் வெள்ளை சாமி நாடார் கல்லூரி ஆகியன ஆரம்பித்தன. 1965ல் அகில இந்திய காங்கிரஸ் தலைவர் மாண்புமிகு கே. காமராஜ் நாடார் இக்கல்லூரியை ஆரம்பித்து வைத்துள்ளார். முதலமைச்சர் கே. காமராஜ், ஆதித்தன் நாடார், எம். எஸ். வி ராஜா நாடார் (விருது நகரின் சீமான்) ஆகியோர் முக்கிய நபர்களாகினர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வீரந்தரும் வீரபத்திரகாளியின் கோயில்
குருதெனிய


இலங்கைக்கு வருகை தந்த நாடார்களுள் சுடலை முத்து நாடார் முக்கியமானவர். இவரே முதலில் குருதெனியாவுக்கு வருகை தந்த நாடார் ஆவார். இவரது வாரிசான நாச்சு முத்து நாடாரும் இங்கு வாழ்ந்துள்ளார். சுடலை முத்து நாடார் சால்ஸ் ஹென்ரி த சொய்ஸா முதலியாரிடமும் செட்டியாரிடமுமே காணிகளை வாங்கியுள்ளார். இந்த சொய்ஸாவே பொரமடுல்ல சென்றல் மற்றம் கல்விக்கூடங்களையும் ஏற்படுத்தியவர்.



( ஹங்குரங்கெத்த சொய்சாவின் வலவ்வ – வீடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலஸ்தாபனத்தின் பின் பக்தருக்காய்ப் பரமசக்தி அமர்ந்த இடம்

இவர்களின் பின் ஒளிமுத்து நாடார் மற்றும் அவரது சகோதரர் ஈனமுத்து நாடார் ஆகியோர் இங்கு புகழோடு வாழ்ந்துள்ளனர். அக்காலத்திலேயே ஒளிமுத்து நாடாரால் இக்கோயில் கட்டப்பட்டுள்ளது. ஒளிமுத்து நாடாரின் வாரிசுகளான கந்தன் நாடார், லெச்சுமனன் நாடார் ஆகிய சகோதரர்கள் இக்கோயிலை தொடர்ந்து நிர்வாகித்து வந்துள்ளனர். இதன்பின் இவர்களது மைதுனர் உறவைக் கொண்ட கோபாலசாமி நாடார் இக்கோயிலை நிர்வகித்துள்ளார். பிற்காலத்தில் கந்தன் நாடார், லெச்சுமனன் நாடார் பரம்பரையில் அவரது வாரிசான செல்லையா நாடார் இக்கோயிலை நிர்வகித்துள்ளார். செல்லையா நாடார் காலத்தில் இக் கோயில் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. இதன்பின் இவரது வாரிசான சிவக்குமார் தற்போது கிராம மக்களின் பூரண ஒத்துழைப்புடன் பரிபாலன சபையின் தலைவராக இம்முறை 2014 கும்பாபிஷேகத்தை நடத்துகிறார். 1962ல் லட்சுமணன் நாடார் தலைமையில் செல்லையா நாடரும், இணைந்து இக் கோயிலின் கும்பாபிஷேகத்தினை நடாத்தியுள்ளார். இதன் பின் 1970ல் கோபாலசாமி நாடார், லட்சுமணன் நாடார் ஆகியோர் இணைந்து கும்பாபிஷேகம் ஒன்றினை நிறைவேற்றியுள்ளனர். 1992ல் கோபாலசாமி நாடார், கோசல்ராம், சச்சிதானந்தன், தட்சணாமூர்த்தி, ராஜகுலேந்திரன், செல்வராஜ் குழுவினர் இணைந்து இறுதியாக கும்பாபிஷேகத்தினை நடாத்தியுள்ளனர். அதன் பின் இன்று 14.07.2014இல் இக் கும்பாபிஷேகம் நடக்க அம்பாள் அருள் பாலித்துள்ளார்.

இக்கோயிலின் மற்றொரு விசேடம் இவ் அம்பாள் சிலை நிண்ட கோலத்துடன் ஆறு கன்னிகளுடன் காணப்படுவதாகும். நிண்ட கோலத்துடன் ஆறு கன்னிகளுடன் காணப்படுவதால் கேட்ட வரம் கொடுப்பவளாகத் திகழ்கிறார். இதனாலேயே குழந்தை இல்லாதவர்கள் விசேடமாக இக்கோயிலுக்கு விஜயம் செய்து நேர்த்திக்கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக் குழந்தைப் பேறு பெறுகின்றனர். குழந்தைப் பேறுக்கு வரம் கொடுக்கும் அம்பாளாகக் கன்னிகளைக் கொண்ட அம்பாளாக அற்புதம் செய்பவளாகத் திகழ்கிறாள்.


நாடார்கள் குருதெனியவில் மர வியாபாரம் செய்துள்ளனர். இதனாலே மரத்திலான அம்மன் சிலையினைப் பிரதிஷ்டை செய்தார்கள் எனவும் இதன் பின் இப்பகுதியில் சொய்சா முதலியார் மற்றும் செட்டியாரின் காணிகளில் தேவர்களும், ஆறுநாட்டு வேளாளர்களும் குடியேறியுள்ளனர். இவர்கள் வாசனைத் திரவியங்கள், கோப்பி, கொக்கோ, தென்னை, மிளகு, புகையிலை, வாழை ஆகியவற்றை உற்பத்தி செய்தனர். வாசனைத் திரவியங்களில் கருவாப்பட்டை அதிகம் இப்பகுதியில் பயிரிடப்பட்டு விற்பனை செய்யப்பட்டுள்ளது. கருவா நிறைந்த பகுதி என்பதனாலேயே (கருவா, சிங்களத்தில் குருந்து) குருந்து வத்த – கருவாத்தோட்டம் எனப் பெயர்பெற காரணமாயிற்று. இப்பகுதியில் புகையிலை விளைச்சல் செய்யப்பட்டதால் யாழ்ப்பாணத்துச் சுருட்டுத் தொழிலாளர்கள் புகையிலை வாங்குவதற்காக வந்து சென்றுள்ளனர். சுருட்டுக்குத் தேவையான புகையிலை தூள், சிகரட் புகையிலை தூள் ஆகியன இங்கு விளைச்சல் செய்யப்பட்டுள்ளன. மூலப்பொருள்களாகப் புகையிலை இருந்ததால் யாழ்ப்பாணச் சுருட்டு தொழிலாளர்களும் இங்கு குடியேறியுள்ளனர். நாடார்கள் மர வியாபாரம் செய்த இடத்தில் இந்த கோயில் அமைக்கப்பட்டுள்ளது. மரத்தினாலான இச்சிலையில் 6 கன்னிகளின் உருவங்கள் (பெண் குழந்தைகள்) அமைந்துள்ளன. நான்கு உருவங்கள் அதன் அடிச் சுற்றிலும் , இரண்டு கரங்களிலும் காணப்படுகின்றன. எனவே தான் ஆறு கன்னி ஸ்ரீ முத்து மாரியம்மன் என அழைக்கப்படுகின்றது. இங்கு எஸ். பி. எஸ். சைச் சேர்ந்த எஸ். டி. மூர்த்தி நாடார் தனது தந்தை ஞாபகமாகத் தேர்த்திருப்பணியை ஆரம்பித்து வைத்துள்ளார். இதன் பின் தேர்த்திருவிழா தொடர்ந்து நடைபெற்று வந்துள்ளது. இத்தேருக்கு இப்பகுதிச் சிங்களவர்களும் பூஜைகள் செய்து வழிபடுகின்றனர். இது போலவே ஆடிப் பெருவிழா தொடர்ந்தும் செய்யப்படுகின்றது.




விண்தொட நிமிரும் விமானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முனியாண்டி கோயில் உறைகொண்ட பூமி
(இடும்பன் பூஜை நடத்தப்படும் இடம்)



என்றும் அருளும் அன்னை ஆலயத்து
இன்று தெரியும் அழகு முகப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவில் காவேரி கங்கையில் செய்யப்படுவது போன்று இலங்கையில் குருதெனியா கோயிலில் ஆடிப் பெருவிழாவானது குருதெனியா மாகாவலி கங்கை ஆற்றை மையமாகக் கொண்டு நடைபெறுகிறது. தேர்த்திருவிழாவின் தேரினை 1998ம் ஆண்டு இலங்கையில் சுதந்திர பொன் விழா (1948 சுதந்திரம் பெற்றது – 1998 சுதந்திர பொன்விழா) வின் போது தலதா மாளிகையில் ஏற்பட்ட குண்டுத் தாக்குதலினால் ஆவேசப்பட்ட சிங்களவர்கள் இத்தேரினைத் தீ வைத்துக் கொளுத்தினர். இரவில் இத் தேர் எரிக்கப்பட்டது.. ஆனால் இதனைச் செய்தோர் எனச் சந்தேகிக்கப்படுபவர்களை அம்பாள் பலி எடுத்து விட்டாள் என்கின்றனர். இந்த அற்புதத்தினைக் குருதெனிய வாழ் மக்கள் அறிவார்கள்.

## உசாத்துணை நூல்கள்


இலங்கை மலையகத் தமிழரின் பண்பாடும், கருத்து நிலையும் - தொகுதி 1. கார்த்திகேசு சிவத்தம்பி (பதிப்பாசிரியர்). கொழும்பு : உதயம் நிறுவனம், 1993. அச்சு.

சந்திரசேகரன், சோ., "மலையகக்கல்வி சில சிந்தனைகள்", கொழும்பு, கவிதாபதிப்பகம், 1999. அச்சு.
மூக்கையா, மா.செ., "இன்றைய மலையகம்", கொழும்பு, தொண்டமான் அறக்கட்டளை, 1995.அச்சு. நல்லையா., சி.,"மலையகத் தமிழர் வரலாறு" கொட்டகலை, சாரல் வெளியீட்டகம், 2003. அச்சு.

ரொபட் கால்டுவெல். "திருநெல்வேலி அரசியலும் பொது வரலாறும்" (A Political and General History of the District of Tinnevelly, in the Presidency of Madras, from the earliest period to its cession to the English Government in A.D. 1801. Madras : E. Keys, 1881.)
H. R. Pate. "Madras District Gazetters" Thirunalveli
இராபட் கால்டுவெல். "நாடார் வரலாறு" மொழிபெயர்ப்பு. எஸ். டி. ஜெயபாண்டியன். சென்னை.
மணிவாசகர் பதிப்பகம்.2001.

Hollup, Oddvar. Bonded labour caste and cultural identity among Tamil plantation workers in Sri Lanka. Colombo: Charles Subasinghe & Sons, 1994. Print.

Mahavamsa . Wilhelm Geiger (ed). Colombo: Ceylon Government Press, 1960. Print.

Nadesan, S. A history of the up country Tamil people. Colombo: Nandalala Publications, 1998. Print.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பாரதி பாடிய பராசக்தி

பேராசிரியர் துரை மனோகரன்



பாரதி என்பது இன்றைய நிலையில் ஒரு கவிஞனைச் சிறப்பிக்கும் பெயராக மாத்திரமின்றி, நவீன தமிழ் இலக்கியத்தின் ஒரு குறியீடாகவும் விளங்குகிறது. நவீன இலக்கியச் சிந்தனைகளின் பிதாமகர் எனக் குறிப்பிடத்தகுந்த பாரதி, கொள்கையளவில் ஒரு முற்போக்குவாதியாகவும் அடிப்படையில் ஓர் ஆத்மீகவாதியாகவும் விளங்குவதை அவரது படைப்புகள் துலாம்பரமாக நிறுவுகின்றன. முற்போக்குச் சிந்தனைகளை வெளிப்படுத்துவதில் தனித்திறமை கொண்டவராகவும், உலகளாவிய சர்வதேசிய நோக்குநிலை வாய்ந்தவராகவும் பாரதி விளங்கிய அதேவேளை, தம்மை ஓர் ஆத்மீகவாதியாகக் கருதிக்கொள்வதில், உணர்ந்து கொள்வதில், வெளிக்காட்டிக்கொள்வதில் அவர் தனியாண்மையோடு விளங்குகின்றார்.

ஆத்மீக அடிப்படையைக் கொண்ட பாரதியின் ஆளுமையை மேம்படுத்தும் அதியுயர்ந்த ஆதர்ச தெய்வமாக அவருக்கு அன்னை பராசக்தி விளங்குகின்றாள். இந்தப் பேரன்னையின் பிரதிபலிப்பாகவே பாரதத்தாயையும், பாஞ்சாலியையும்கூடப் பாரதி பார்க்கிறார். தமது பாரதி அறுபத்தாறு என்ற கவிதையிலே அன்னை பராசக்தியே தமக்குக் கவிதை தருவதாகக் கூறியுள்ளார். பின்வரும் அவரது கூற்று இதனைத் தெளிவுபடுத்துகின்றது.

"மாகாளி பராசக்தி உமையா என்னை
வைரவிகங் காளிமனோன் மணிமா மாயி
பாகார்ந்த தேமொழியாள் படகுச் செந்தீ
பாய்ந்திடுமோர் விழியுடையாள் பரம சக்தி
ஆகார மளித்திடுவாள் அறிவு தந்தாள்
ஆதிபரா சக்தியென தமிர்தப் பொய்கை
சோகாட விக்குளெனைப் புகவொட்டாமல்
துய்யசெழுர் தேன்போலவே கவிதை சொல்வாள்"

இவ்வாறு பல இடங்களிலும் அன்னை பராசக்தியின் அருளை இழையோடச் செய்து கவிதைகள் படைத்துள்ளார், பாரதி. புரட்சியினால் புதுப்பொலிவு பெற்ற புதிய ரஷ்யாவைப் பாடும் போது, "மாகாளி பராசக்தி உருசிய நாட்டினிற் கடைக்கண் வைத்தாள் அங்கே ஆகாவென் றெழுந்தபார் யுகப்புரட்சி" என்றும், "அம்மை மனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிந்திட்டாள் அடிபரவி உண்மை சொலும் அடியார்தம்மை மும்மையிலும் காத்திடுநல் வழியாலே நோக்கினாள் முடிந்தான் காலம்" எனவும் பராசக்தியின் நல்லருளினாலே ரஷ்யாவில் புரட்சி வென்றது என்ற தமது கருத்தைத் தந்துள்ளார்.

பாரதியின் இலக்கிய மேதாவிலாசத்தை என்றென்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கும் பாஞ்சாலி சபதத்தில் வீமனதும் பாஞ்சாலியினதும் சபதங்களே அதன் கொடுமுடிகளாக விளங்குகின்றன. பாஞ்சாலியின் சபதம் பற்றிக் கூறுமிடத்து, "தேவி திரௌபதி சொல்வாள் ஓம் தேவி பராசக்தி ஆணையுரைத்தேன்" என்றும், வீமனின் சபதத்தில், "இது நான் சொல்லும் வார்த்தையென்றெண்ணிட வேண்டா தடையற்ற தெய்வத்தின் வார்த்தை இது சாதனை செய்க பராசக்தி" எனவும் கூறுவது கருதத்தக்கது. பாரதியின் கண்ணன் பாட்டில் இடம்பெறும் கண்ணம்மா - எனது குலதெய்வம் என்ற பாடலில், "நல்லது தீயது நாமறியோம் அன்னை நல்லது நாட்டுக! தீமையை ஓட்டுக!" என்ற அடிகள் அன்னை பராசக்தி மீதான அவரது ஈடுபாட்டினை உணர்த்துகின்றன.

அன்னை பராசக்தி மீதான பாரதியின் ஆத்மார்த்த உணர்வும், அவரது படைப்புகளில் இடம்பெறும் அந்திமாலை வர்ணனை, இதற்குத் தகுந்தோர் உதாரணமாகும்.

"கணந்தோறு மொருபுதிய வண்ணங் காட்டி
காளிபரா சத்தியவள் களிக்குங் கோலம்
கணந்தோறு மவள் பிறப்பா ளென்று மேலோர்
கருதுவதன் விளக்கத்தை யிங்கு காண்பாய்" என்றும்

"இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
யெடுத்தவற்றை யொன்றுபட வுடுக்கி வார்த்து
மடிவான வட்டத்தைக் காளி யாங்கே
மொய்குழலாய் சுழற்றுவதன் மொய்ம்பு காணாய்" எனவும்

"உமைகவிதை செய்கின்றாள் எழுந்து நின்றே
யுரைத்திடுவோம் பல்லாண்டு வாழ்க வென்றே" என்றும் பாரதி பாடுமிடத்து, அன்னை பராசக்தி மீதான அவரது அடிமனத்து ஈடுபாட்டை நாம் புரிந்துகொள்ள முடிகின்றது.

அன்னை பராசக்தி உலகம் முழுவதிலும் பரந்து காணப்படுகிறாள். தீமையும் நன்மையும் அவளின் செயல்களாகவே விளங்குகின்றன என்பதையும் பாரதி தமது பாடல்களில் வற்புறுத்துகின்றார்.

"யாது மாகி நின்றாய் - காளீ!
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நன்மை யெல்லாம் - நின்றன்
செயல்களன்றி யில்லை" என்பதன் மூலம் இதனை உணர்த்துகின்றார். "மாதா பராசக்தி வையமெலா நீ நிறைந்தாய் ஆதார முன்னையல்லால் ஆரெமக்குப் பாரினிலே" என்ற அவரது வரிகளும் இதனையே புலப்படுத்துகின்றன. சக்தி விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பாடலில் " ஆதிப் பரம்பொருளின் ஊக்கம் - அதை அன்னையெனப்பணிதல் ஆக்கம்" என்று பாரதி பாடியுள்ளார்.

அன்னை பராசக்தியின் அருள் இருந்தால், உலகில் உள்ள அனைத்தும் நமது வசமாகிவிடும் என்பதனையும் பாரதி எடுத்துரைக்கிறார்.

சக்திசக்தி சக்தியென்று சொல்லு - கெட்ட
சஞ்சலங்கள் யாவினையுங் கொல்லு
சக்திசக்தி சக்தியென்று சொல்லி - அவள்
சந்நிதியி லேதொழுது நில்லு"

பராசக்தியின் அருளினாலே தமக்கு ஏற்பட்ட நன்மைகளைப் பாரதி அடுக்கிச் சொல்கிறார். ஐயம், திகைப்பு, அச்சம், சினம், பொய்மை போன்றனவெல்லாம் அவளின் அருளினால் தம்மை விட்டுத் தொலைந்து போய்விட்டன எனப் பாரதி பாடுகின்றார்.

"ஐயமுந் திகைப்பும் தொலைந்தன ஆங்கே
அச்சமுந் தொலைந்தது சினமும்
பொய்யுமென் நினயை புன்மைக ளெல்லாம்
போயின வுறதிநான் கண்டேன்"

அத்தோடு, பராசக்தி இன்னின்னவாறு செயல்படுமாறு தம்மை ஆக்கிவிட்டாள் என்றும் பாரதி தெரிவிக்கின்றார்.

"பயனெண்ணாமல் உழைக்கச் சொன்னாள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்
துயரி லாதெனைச் செய்து விட்டாள்
துன்ப மென்பதைக் கொய்து விட்டாள்" என்று அமைந்துள்ளன பாரதியின் பாடல் அடிகள்.

மஹா சக்திக்கு விண்ணப்பம் என்ற கவிதையில் பாரதி அற்புதமான தமது எண்ணங்களை வெளியிடுகின்றார். பாரதியின் சிறந்த பாடல்களில் ஒன்று இது.

"அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி
யகத்திலே யன்பினோர் வெள்ளம்
பொறிகளின் மீது தனியர சாணை
பொழுதெலா நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம் கருமயோ கத்தி
னிலைத்திடல் என்றிலை யருளால்
குறிகுண மேது மில்லாத பயனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே"

இன்னொரு பாடலிலே பாரதி இவ்வாறு தமது வேண்டுதல்களை வெளியிடுகின்றார்.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே யெண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்தநல் லறிவு வேண்டும்
பண்ணிய பாவ மெல்லாம்
பரிதிமுன் பனியே போல


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்ணிய நின்மு னிங்கு
ரசித்திடல் வேண்டு மன்னாய்''

பாரதியின் "காணிநிலம் வேண்டும் பராசக்தி காணிநிலம் வேண்டும்'' என்ற பாடல் மிகவும் பிரபல்யமானது. பாரதி முதலில் இப்பாடலுக்குப் 'பராசக்திக்கு ஒரு புலவன் வேண்டுகோள்'' என்றே தலைப்புக் கொடுத்திருந்தார். பின்னர் என்ன காரணத்தினாலோ "காணிநிலம்'' என்று தலைப்பை மாற்றியமைத்துவிட்டார். அப்பாடலின் இறுதிப் பாடல் இவ்வாறு அமைந்துள்ளது.

"பாட்டுக் கலந்திடவே - அங்கேயொரு
பத்தினிப் பெண்வேணும் - எங்கள்
கூட்டுக் களியினிலே - கவிதைகள்
கொண்டு தரவேணும் - அந்தக்
காட்டு வெளியினிலே - அம்மா, நின்றன்
காவலுற வேணும் - என்றன்
பாட்டுத் திறத்தாலே - இல்லையத்தைப்
பாலித் திடவேணும்''

காணிநிலம் என்ற இப்பாடல் பாரதியின் அருமையான படைப்புகளுள் ஒன்று பாரதியின் படைப்பாற்றலுக்குப் பெருமை சேர்க்கும் பாடல்களுள் ஒன்று இது. பராசக்தி தமது படைப்பாற்றலை மிகவும் விரும்புகின்றாள் என்பதையும், பாடலொன்றில் பாரதி அழகாக எடுத்துரைக்கின்றார்.

"நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்
நானி லத்தவர் மேனிலை யெய்தவும்
பாட்டி லேதனி யின்பத்தை நாட்டவும்
பண்ணி லேகனி கூட்டவும் வேண்டி நான்
மூட்டு மன்புக் கனலோடு வாணியை
முன்னு கின்ற பொழுதிலெல் லாங்குரல்
காட்டி யன்னை பராசக்தி யேனமுயேன்
கவிதை யாவுந் தனக்கெனக் கேட்கின்றாள்''

தமது கவிதைகள் நாட்டு மக்களின் நலத்திற்காகவும், உலக மக்கள் மேல்நிலை எய்தவும் அமைவதோடு, இனிமையும், கலையகமும் கொண்டவை என்பதனையும் இப்பாடல் மூலம் பாரதி புலப்படுத்துகின்றார்.

பாரதியின் வேள்விப்பாட்டு என்ற பாடலில் சமுதாய ரீதியிலான தமது வேண்டுதல்களைப் பாரதி முன்வைப்பதைக் காணலாம். தாம் ஒரு மக்கள் கவிஞர் என்பதை இப்பாடலில் அவர் உணர்த்துகிறார்.

"நின்னருள் வேண்டுகின்றோம் - எங்கள்
நீதியுந் தருமமு நிலைப்பதற்கே
பொன்னவிர் கோயில்களும் - எங்கள்
பொற்புடை மாதரு மதலையரும்
அன்னநல் லணிவயல்கள் - எங்கள்
ஆடுகள் மாடுகள் குதிரைகளும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னலைக் காத்திடவே - அன்னை
இணைமலர்த் திருவடி துணைபுகுந்தோம்.

எம்முயி ராசைகளும் - எங்கள்
இசைகளுஞ் செயல்களுந் துணிவுகளும்
செம்மையுற் றிடவருள்வாய் - நின்றன்
சேவடி யடைக்கலம் புகுந்துவிட்டோம்
மும்மையி னுடைமைகளும் - திரு
முன்னரிட் டஞ்சலி செய்துநிற்போம்
மும்மையி னுடைமைகளும் - திரு
முன்னரிட் டஞ்சலி செய்துநிற்போம்
அம்மைநற் சிவசக்தி - எமை
அமரர்தந் நிலையினி லாக்கிடுவாய்"

சமுதாயம் தழுவிய பாரதியின் நோக்கையும், போக்கையும் இப்பாடல்கள் சிறப்பாக உணர்த்துகின்றன.

பாரதி 'ஹே காளீ!' என்ற பாடலில் தாம் செய்ய விரும்பியவற்றைப் பட்டியல் இட்டுக் கூறுவதோடு, அவற்றையெல்லாம் பராசக்தி நிச்சயம் அருளுவாள் என்ற நம்பிக்கை உணர்வையும் வெளிப்படுத்துகின்றார்.

"தானம் வேள்வி தவங்கல்வி யாவும்
தரணி மீதி னிலைபெறச் செய்வேன்
வான மூன்று மழைதரச் செய்வேன்
மாறி லாத வளங்கள் கொடுப்பேன்
மானம் வீரிய மாண்மைநன் னேர்மை
வண்மை யாவும் வழங்குறச் செய்வேன்
ஞான மோங்கி வளர்ந்திடச் செய்வேன்
நான்வி ரும்பிய காளி தருவாள்"

பராசக்தி எப்போதும் நல்லதையே நமக்குச் செய்வாள், அவள் அருளால் அல்லது நீங்கிவிடும் என்ற நம்பிக்கை உணர்வினை, 'ஓம் சக்தி' என்ற பாடல் மூலம் பாரதி வெளிப்படுத்துகின்றார்.

"நல்லதுந் தீயதும் செய்திடும் சக்தி
நலத்தை நமக்கிழைப்பாள்
அல்லது நீங்குமென் றேயுல கேழும்
அறைந்திடு வாய்முரசே!"

"உப்பளம் கோயிலில் எழுந்தருளியிருக்கும் தேசமுத்துமாரி" என்ற பாடலில், அம்பிகையை நம்பினால் அதிகவரம் பெறலாம் என்னும் தமது நம்பிக்கையைத் தமது பாணியில் பாரதி அழகாக வெளியிடுகிறார்.

"துன்பமே யியற்கையெனும்
சொல்லைமறந் திருவோம்
இன்பமே வேண்டிநிற்போம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவுமவள் தருவாள்

நம்பினார் கெடுவதில்லை
நான்குமறைத் தீர்ப்பு
அம்பிகையைச் சரண்புகுந்தால்
அதிகவரம் பெறலாம்" இத்தகைய பாடல்களும் பாரதியைச் சிறப்பாக இனங்காட்டுகின்றன.

எதிர்காலத்தில் சமுதாயத்துக்கு நன்மைகள் வந்துசேரும் என்ற தன்னம்பிக்கையில் பாரதி 'புதிய கோணங்கி' என்ற பாடலைப் பாடியுள்ளார். குடுகுடுப்பைக்காரன் குறி சொல்வது போல அமைந்த இப்பாடலில், சக்தி நோக்கி அவன் பாடுவதாக பாரதி பாடுகின்றார். அப்பாடலில் இருந்து சில வரிகள்

"குடுகுடு குடுகுடு குடுகுடு குடுகுடு
நல்லகாலம் வருகுது நல்லகாலம் வருகுது
சாதிகள் சேருது சண்டைகள் தொலையுது
சொல்லடி சொல்லடி சக்தி மாகாளி"

சக்தியின் அருளினாலே தாம் குறிசொல்வது போலப் பாரதி இப்பாடலை அழகாக அமைந்துள்ளார். எதிர்காலம் பற்றிய தமது நம்பிக்கை உணர்வினைப் பாரதி இப்பாடலில் புலப்படுத்துகின்றார்.

மகாகவி பாரதி ஏனைய தெய்வங்களையும் பாடியுள்ளார் எனினும், பராசக்தியைப் பாடுவதிலேயே அவர் பெருவிருப்பம் கொண்டிருந்தார் என்பதை அவரது பல பாடல்கள் உணர்த்துகின்றன. பராசக்தியின் பெருமை, புகழ், சிறப்புக்கள் என்பவற்றைப் பாடுவதோடு, அவளிடத்தில் பல வேண்டுகோள்களையும் முன்வைத்துள்ளார். பராசக்தி மீது அளவற்ற பக்தி கொண்ட அவர், யாவும் அவள் தருவாள் என்ற நம்பிக்கை உணர்வினைக் கொண்டவராகவும் விளங்குகிறார். பாரதியின் உள்ளத்தில் பராசக்தி நீக்கமற நிலைத்திருப்பது போல, அவரது பாடல்களிலும் அவள் பரவியிருப்பதைக் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாசகத்திற் பக்தி அனுபவ வெளிப்பாடு

மகாவித்துவான், கலாநிதி க. நாகேஸ்வரன்
முதநிலை விரிவுரையாளர், மொழித்துறை
சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
பெலிஹுசல்லோயா.

பக்தி வைராக்ய விசித்திரம் பற்றிப் பேசுவது திருவாசகம். பக்தியின் மெய்பாடுகளை 'மெய்யுணர்தல் மூலமாகத் துலக்குவது திருச்சதகம். பக்தி நிலையிலே விதிர்விதிர்த்து நிற்றல்' என்பதனை எடுத்துரைப்பது இப்பனுவல். பக்தியின் அடுத்த நிலை 'கைதான் தலைவைத்தல்' அதற்கடுத்து 'கண்ணீர் ததும்புதல்' பின்னர் 'உள்ளம் வெதும்புதல்' என்று பக்தி நிலை வளர்ச்சியடைவது நோக்கற்பாலது. உடம்பின் பரிபக்குவ நிலை இத்தகு வளர்முகயாக மெய்ப்பாட்டுணர்ச்சி நலனைத் தந்து வெளியிலே பக்தனை இனங்காட்டும் என்பது உணர்தற்பலபது. இலக்கியமும் அனுபவ வெளிப்பாடும் என்றும் நின்று நிலைத்து, நீடித்த பக்தி நலநாட்டத்தை அழுத்தியுரைத்தவரே இறை நல வேட்கையைத் தந்து நிற்பதனை உணருகிறோமல்லவா? பக்திப்படிநிலையிலே உச்சமடைவதற்காகவே உணர்வோடு சிவனை உள்நினைந்து உருகி வேண்டியவர் மாணிக்கவாசக சுவாமிகள். இதன் பெறுபேறுதான் திருவாசகம் எனுந்தேன். சிவன் 'பக்திவலையிற் படுவேன்' என்பது மணிக்கவாசரது பேரனுபவம். பக்திக்குழைவும் இறைவனது அருளின் ஆட்சிப்படுத்துகையும் அடியவனை விதிர்விதிர்க்க வைப்பதனை நோக்கமுடிகிறது. 'கைதான் தலைவைத்து நிற்றல்' என்பது மனிதனுள் கிடந்த அன்புநிலை துடித்தெழுந்து செயல் வடிவம் பெறுவதனாலே வெளிப்பட்டு நிற்கும் மெய்யுணர்வுச் செயற்பாடு. 'கண்ணீர் ததும்புதல்' என்பது தான் மிகவுயர்ந்த பக்திப்புளகாங்கித நிலைப்பாடு. இதன்பின் உள்ளம் வெதும்புதல் என்றுரைக்கும் திருவாசக பக்திமெய்ப்பாட்டு வளர்ச்சியினை நாம் சற்று ஞாபகப்படுத்துதல் நலம் பயப்பதாகும். நம்முள்ளத்து இருந்து பழுத்த பக்திப் பண்பாடும் நடைமுறையும் காலத்துக்குக் காலம் புதிய புதிய தாக்கங்களினாலும், நெஞ்சத்துக்கண் மறைத்து நெகிழவிடும் கைங்கரியமாயும் அற்றுப் போவதனையும் இன்று உணர முடிகிற காரணத்தினாலே உள்ளதை உள்ளபடி 'உணர்த்துதல்' வேண்டும் எனும் நிலைப்பாடு காரணமாக இக்கருத்துக்களை ஆழமாய் உணர்த்த வேண்டியுள்ள கடப்பாடுண்டு. சைவ சித்தாந்தம் 'தாடலை' என்று குறிப்பிடும். ஆன்மாவில் 'சிவம்பதிதல்' எனும் தன்மையும் இங்கு நினைவுபடுத்த வேண்டியது அவசியமாகும். தங்கப்பவுணைச் சூடேற்றி அதனில் கல்லினை வைத்து இறுக்கும் முயற்சிதான் ஆன்மாவில் 'சிவசக்தி பதிதல்' என்பதாகும். தன்முனைப்புக்கெடத் தனிமுதலின் பதிவு ஆன்மாவிலே பொருந்துதலே 'திருவருட் சக்தி பதிதல்' எனப்படுகிறது. இதனையே மாணிக்கவாசகர் திருச்சதகப் பாடலிலே திருவருளாலே இருக்கப்பெறின் என்று குறிப்பிடுகிறார். மணிவாசகரின் பக்தி 'பிறதெய்வம் உள்ளேன்'என்ற நிலைப்பாட்டை எட்டிவிடுகிறது. இவ்வுறுதிப்பாடு இன்று ஆழமாகச் சிந்தித்தற்குரிய தொன்றாகிறது.

சிவவழிபாடே உண்மையான தனித்துவ வழிபாடு என்ற தெளிவுகொண்டவர் மாணிக்கவாசக சுவாமிகள் என்ற அற்புதச் செய்தியை நாம் பக்தியுடன் உறுதிபடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிந்துணர்ந்து கொள்ளுதல் வேண்டும். 'உள்ளேன் பிறதெய்வம்' என்று சத்தியப் பிரமாணம் செய்து கொள்ளும் திருச்சதகத்துப் பாடல்வரிகள் நமக்கும் இன்று கைவர வேண்டும். இது மிகவும் கைவர இயலாத கடுமையான நடைமுறையிலே மிகவும் உயரிய, கட்டுப்படானதொரு கொள்கைப் பிரகடனமாகும்.

திருவருளாலே உலக வாழ்விலே என வாழ்வு இருக்கப்பெறின் 'பிறதெய்வம் உள்ளேன்' என்றும் உறுதி தருகிறார். பிறதெய்வம் உள்ளது சிவனையே தொழ நினைக்கும் மாணிக்கவாசகரது மனம் மிக எளிமையாகவே சிவவழிபாட்டை நேசிக்கிறது. எப்படியெனில் 'நினதடியாரொடு' உறவு வைத்துக் கொள்வதாலே பிறதெய்வம் உள்ளேன்' என்றும், நாம் பொருள் கொண்டு மிக மகிழலாம் தானே! 'சங்கம வழிபாடு' சிவ வழிபாட்டையே தூக்கி நிலைநிறுத்தும் என்ற 'மெய்யனுபவம்' திருவாசகத்தினூடே உணர்த்தப்படுகிறதல்லவோ? இங்கு சைவ சித்தாந்தத்தின் 'சங்கம வழிபாடுக் கொள்கை சுட்டப்படுகிறது. 'உனக்கன்பருள்ளஞ் சிவமே பெறுந்திரு' வையே நான் பெறுவதற்கு விரும்புகிறேன். இதனையும் 'நின்திருவடிக்காம்' நின்றுருகிட விழைகிறேன் என்றும் அதற்கு 'அருளுகண்டாய்' அடியேற்கு என்று கசிந்துருகும் மெய்ப்பாடு பக்தியின் உச்சக்கட்டமல்லவா! மாணிக்கவாசகரின் நினைவு 'நிரந்தரமாய் உன் வார்கழற்கன்பு எனக்கு நிரந்தரமாய் அருளாய்' என்றல்லவா அலறுகிறார். இங்கு அவரது தீராத வேட்கையும் அன்புறுத்தலும் வெளிப்படக் காணுகிறோம்.

மாணிக்கவாசகர் தமது பக்தியின் தன்மையைக் காட்டும் பொழுது 'நாடகத்தால் உன்னடியார்போல் நடித்து' என்று குறிப்பிடும் பாங்கு பெரும்பாலோர் நன்கறிந்ததே! இங்கு பக்தியனுபவமின்மையும், எவ்வாறு பக்தி செய்யவல்லேன் என்னும் அவா நிரம்பிய உள்ளத்தினராய் வேண்டுதல் புரியும் பான்மையையும் அறிகிறோமல்லவா? இதுதான் தலைவனான சிவனையே 'அறிவுறுத்தும்படி' இருந்து நிற்கும் நிலை.

'அருளமுதம் புரியாயேல் நலன் வருந்துவன்' என்று குறிப்பிட்டு 'மற்றென்னே நான் ஆமாறே' என்றும் கவலையுறுகிறார். மணிவாசகர் தமது பக்தியை நோக்கி இழிவுபடக் கூறும் பாங்கும் உனை எப்படித்தொழுவது, போற்றுவது, புகழ்வது என்பனவற்றித் 'தம்மைப் பழிப்பது' போலவே திருவாசகத்திலே பாடும் நிலைப்பாடும் காணத்தக்கது. உனது திருவடிகளை எண்ணி நினைந்து அகங்குழையேன், அன்புருகேன், பூமாலை புனைந்தேத்தேன், புகழ்ந்துரையேன், நின் திருக்கோயில் தூகேன் மெழுகேன் கூத்தாடேன் 'சாயிறே விரைகின்றேன்' என்றெல்லாம் இரங்குகின்றார், ஏங்கி நிற்கின்றார். தன் மனதுக்கு அறிவுறுத்தும் பக்திப்பான்மைகள் இங்கு நாம் நெடிது சிந்திக்கற்பாலது 'நெஞ்சே நீ எப்பேறப்பட்டனீ' என்பதைப் பின்வருமாறு பாடுகிறார்.

"வேனில்வேள் மலர்த்துணைக்கும்
வெண்நகைச் செவ்வாய்க்கரிய
பானலார் கண்ணியர்க்கும் பதைத்துருகும்
பாழ்நெஞ்சே" (திருச்சதகம் செய் 19)

என்று பாழ்நெஞ்செனத் தமதுள்ளத்தைத் திட்டித்தீர்க்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலமுதப்பெருங்கடலே, மலையே முனைவனே என்றெல்லாம் சிவனைக் குறிப்பிடும் மணிவாசகர் தம்மை மூர்க்கனே என்று அழைக்கிறார். இவ்விடத்திலே தமிழில் உள்ள பழமொழி ஒன்று நினைவுக்கு வருகிறது. 'மூர்க்கனும் முதலையும் கொண்டது விடா' என்பதே அப்பழமொழியாகும். இப்பழமொழி 'பக்தி வைராக்கியம்' என்னும் பொருளோடு மிகமிக நெருங்கிய தொடர்புடையது என்பதைச் சூக்குமமாயுணர்வோர் நன்குணர்வர். 'புறப்புறந் திரிந்து சிக்கெனப் பிடிக்குந் திருவருட்செயல்தான் சிவன்செயல்'. இது உயிருக்கும் பொருந்தும், இறைக்கும் பொருந்தும். பெரியபுராணத்திலே சேக்கிழார் சுவாமிகள் கண்ணப்பனது பக்தி வைராக்கியத்தைச் சுட்டுமிடத்திலே 'வங்கினைப்பற்றிப் போகா வல்லுடும்பு' என்று உவமித்துள்ளமையும் கண்டின்புறத்தக்கது.

சிவனைத் 'தேவர்கோன் அறியாத தேவதேன்' என்று பெருமைபட பேசும் மணிவாசகர், மூவர் கோனாய் நின்ற முதல்வன், மூர்த்தி மூதை, மாதாளும் பாகத்தெந்தை என்றெல்லாம் பக்தியுணர்வு மேலிட அழைக்குந்திறன் நோக்கற்பாலது. 'ஆத்துமசுத்தி'யில் மிகவும் தன்னிலைக்கிரங்கிவே பின்வருமாறு 'செய்வதொன்றறியேனே' என்று முடிகிறது. அருமையானதொரு திருவாசகப் பாடல்.

"ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்(கு)
 ஆன்பிலை என்புருகிப்
பாடுகின்றிலை பதைப்பதுஞ் செய்கிலை
 பணிகிலை பாதமலர்
சூடுகின்றிலை சூட்டுகின்றதுமிலை
 துணையிலி பிணநெஞ்சே
தேடுகின்றிலை தெருவுதோ றலறிலை
 செய்வதோன் றறியேயே! (செய் 31) இங்கு 'பிண நெஞ்சே' என்று நெஞ்சை விழித்துரைக்கும் மாணிக்கவாசக சுவாமிகள் அட! பின நெஞ்சே! நீ ஆடுகின்றாயில்லை தில்லைச்சிற்றம்பலவன் மீது அன்புவைக்கிறதில்லை, என்புருகிப்பாடுகின்றிலை! பதைப்பதுஞ் செய்கிலை! பணிகிலை, பாதமலர் சூடுகின்றிலை, சூட்டுகின்றதுமிலை, தேடுகின்றிலை, தெருவுதோறலறிலை, செய்வதொன்றறியேனே என்று தெருட்டியுரைக்கிறார். இத் திருவாசகத் திருப்பாடலூடே 'பக்தியை' எழுப்புவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் எனும் கருத்தைத் தெளிவுபடுத்துகிறார். சிவனைத் தேனே, அமுதே, கரும்பின் தெளிவே, தித்திக்கும் யானே என்று விளிக்கும் மணிவாசகர் "யானே பொய்' 'என் நெஞ்சும் பொய்' 'என் அன்பும் பொய்' ஆனால் வினையேன் அமுதால் உன்னைப் பெறலாமே" என்று அகங்குழைந்து பாடுகிறார்.

குருவருளின் மூலம் பக்தியுணர்வெனும் அற்புதச் சொத்தினைப் பெற்றவர் மாணிக்கவாசக சுவாமிகள். "மாசிலாத மாக்கருணை வெள்ளமே" என்றும் 'ஈறிலாத நீ எளிமையாகி வந்து ஒளிசெய் யானுடமாக நோக்கி' என்றும் சிவனின் கருணை மொழி தன்மைகளைச் சுட்டுகிறார். 'வானநாடரும் அறியொணாத நீ' என்றும் 'ஏனை நாடருந்தெரியோணாத நீ' என்னை இன்னிதாய் ஆண்டுகொண்டவா என்றும் கூறும் பொழுது, சிவனின் 'ஞானநாடகம்' 'ஆனந்தாதீம்' இங்கு பேசப்படுகிறது. இங்கு 'ஏனைநாடருந்தெரியோணாத நீ' என்ற பெருமை குறித்து மிகவிரிவாக ஆராய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும். அடிப்படைகள், பின்னணி, சாதனைகள், இயல்பு நிலைகள், பண்பாடு, கலாசாரம், நடையுடை பாவனை, வாழ்க்கைமுறை, விழாக்கள், விரதங்கள், தத்துவம், அனுபூதியெனும் இவற்றினால் சிவனை 'ஏனை நாடர் தெரியமாட்டானம்' பிரத்தியட்சம். 'விண்ணும் மண்ணகம் முழுவதும் யாவையும் வைச்சு வாங்குவாய்' என்று சிவனைக் குறிப்பிடுகிறார். இவை ஆழமான பக்தியினால் பரமணவியந்து கூறியவை என்று கருதலாம்.

பக்திநெறிக்கரிய பிறிதொரு சாதனம் பாடுதலாகும். பாடுதல், ஆடதல், இறையருளோடு கூடுதல் என்பவற்றையும் மணிவாசகர் நூறாவது திருவாசகத்திலே பாடியுள்ளார். 'பாடவேண்டும் நலன் போற்றி நின்னையே பாடி நைந்துநைந்துருகி நெக்கு நெக்காட வேண்டும் நலன் போற்றி' என்று கேட்கிறார் மாணிக்கவாசக சுவாமிகள்.

'கடையவனானேன்' என்று தமது இழிநிலையினைக் குறிப்பிடும் மணிவாசகர் ஏன்? என்ன காரணத்தாலே தாம் 'கடையவனானேன்' என்பதனையும் வெளிப்படையாகக் கூறுகிறார். முதற் காரணம் மாதரின் மயங்கும் 'பெண் மயக்கம்' என்று துணிவுடன் பாடுகிறார்.

1. கொள்ளேர் பிளவனலாத் தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய் விள்ளேன் (நீத்தல் விண் 02)
2. காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய் வேருறு வேனை விடுதி கண்டாய் (நீத். விண். 03)
3. செழிகின்ற தீப்புரு வீட்டிலிற் சின்மொழியளிற் பன்னாள் விழுகின்ற என்னை விடுதி கண்டாய் (நீத். விண். 05)
4. கொழு மணியேர் நகையார் கொங்கைக் குன்றிடைச் சென்று குன்றி விழுமடியேனை (நீத். விண். 27)
5. உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்தீயிருனாப்பாய் விழைதரு வேனை விடுதி கண்டாய் (நீத். விண். 46)

எனவரும் வரிகள் மூலம் பக்தியுணர்வைத் தடுக்கும் புத்திக் கீழ் நிலைகளை நோக்குதல் பொருந்துவதாகும். 'முன்னைப் பழம்பொருட்டு முன்னைப் பழம் பொருளே' என்றும், "பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே" என்றும் சிவனை உணர்ந்தறிந்த திருவருளை நோக்கித் திருவெம்பாவைப் பாடல்களிலே வேண்டுதல். செய்வதனை ஈண்டு சிந்தித்தல் வேண்டும். பக்தி நோக்கோடு இணைத்து வாழ்வியல் சுபீட்சம் வேண்டும் பரிபக்குவநிலை சிந்தித்தற்குரியது.

என்றென்றும் முக்காலத்துக்கும் உண்மையான நெறிகளை நெறிகளைத் திருவாசகம் பேசுவதனால் அது பழைமையான நூலின்று, புதிய நூலுமாம். வழக்கொழிந்து போகும் 604களையும், கைவிட்டகலும் நம்பிக்கைகளையும் நிலையாத வழக்காறுகளையும் கொண்ட நூல்கள் தான் மரபுசார்ந்த நூல்கள் என்பது திருக்குறள், திருவாசகம், கம்பராமாயணம், பாரதம், கீதை, நாலடியார் நன்னெறி என்பன புதிய புதிய சிந்தனைகளைத் தரும் நூல்களாகும். காரணம் எக்காலத்துக்கும், எம்மதத்தினருக்கும், எவ்வினத்தினருக்கும் பொதுவான வேண்டிய அதிநுட்பமான கருத்துகளைக் கொண்டமையும் கொள்கையுடைய இலக்கியங்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திலக்கியங்கள், புதுமை இலக்கியங்கள், மக்கட் சமுதாயத்தில் பொது நூலாய் இழையோடுவது 'சமயம்' எனும் அம்சமாகும். அதிலும் காலத்தால் முற்பட்ட சமயமான சிவசமயம் பெருநெறிகள் அனைத்துத் தமிழிலக்கியங்களிலும் ஏதோவொரு வகையிலே பெருஞ்செல்வாக்குச் செலுத்தியுள்ளமையைச் சான்றுகளுடன் நிரூபிக்கத்தக்க நிலைமை இன்று தோன்றியுள்ளது. பெருமைக்கும் நுண்மைக்கும் போற்றதற்குமுரிய உண்மைகள் வெளிவர வெளிவர நமது பக்தி, கலை, பண்பாடு, வழிபாடு, மரபுகள், நம்பிக்கைகள் உற்சவங்கள் பெருமைகள் என்பனவும் கடவுள் பற்றிய தொன்மைகளும், சித்தாந்தங்களும் வெகு அதிசயத்துடனானவையாகவே அமையப்போகின்றன என்பதனை எண்ணுந் தோறும் நமது பண்பாடடுணர்வுகளும் கருத்து நிலைகளும் மாண்புறு சிறப்புறக் காணப்பெறுவது என்பதும் எவராலும் பொறாமைப்படாமல் இருக்க முடியாத தொன்றாகவே வெளிக்கிளம்பப் போகிறது. இது யதார்த்தத்தின் யதார்த்தம், முடிந்த உண்மை, ஆகவே 'பக்தி' யால் சாதிக்கக் கூடியவை அநேகம். இதற்குப் பெருஞ் சோதனைகள் காத்திருக்கின்றன. சைவ பக்திநெறியை அழித்தொழிப்பதையே ஏனைய பத்தியாளர் (பத்தவைப்போர், தீமூட்டுவோர், எரிப்போர்) தமது மாபெரும் புனித கொல்கரியமாகக் கொள்வர். தாங்கிக்கொள்ள முடியாத 'வெப்பிசாரம்' 'பொறாமை' 'அழுக்காறு' 'இயலாமை' 'வன்யம்' 'வக்கிரம்' வெளிப்படுவதை நாம் தரிசிக்கலாம். அற்புதங்களும் அதிசயங்களுங் கூட சில சமயத்துக்கு இழுக்கையே பிற சமயத்தினால் கொண்டு வரும் என்ற உண்மையை நாம் உணர்ந்து நடக்கவேண்டும். எதிர்த்து எக்காலத்துக்கும் சரியான உண்மைக் கருத்துக்கள் தெரிவிக்கும் மேன்மைத்துவம் ஈண்டு சிவ சைவத்துக்கு அத்தியாவசியமேயாகும். வெறும் வரட்டுப் பக்தியையல்ல நாம் நேசிப்பது, வைராக்கிய பக்தியையே நாம் வேண்டுவது. இதற்கு ஆதாரபுருஷர்களே நாயன்மார்களும், ஆழ்வாளர்களும், அநுபூதியாளர்களும், ரிஷிகளும், மகான்களும் எனும் தவ சிஷர்கள் என்பதனை நாம் முழு நம்பிக்கையுடனும், ஏற்புடைமையோடும் ஒத்துக்கொண்டு அங்கிகரித்துப் பின்பற்ற முனைய வேண்டும். சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் வாய்க்கல் பெற்றவர்களே திருமுறையாளர்கள். எனவே சிவமேயாகுக! திருவாசகத்தை உணர்வு நலனே உவக்கும், அறிவாராய்ச்சி பொருந்தாது மெய்ப்பொருளுணர்தலே பக்தி.

"நம்முள்ளே அமிழ்ந்துள்ள பக்தியை
உலகமுய்யப் பயன்படுத்துவோமாக!"

மொழித்துறை,
சப்ரகமுவ பல்கலைக்கழகம்,
02-07-2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

02-08-1994 (வீரகேசரியில் வெளிவந்த கட்டுரை - மீள்பிரசுரிப்பு)

# தனித்துவம் மிக்க குருதெனிய குருந்துவத்தை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்

கண்டி நகரில் இருந்து சுமார் ஐந்து மைல் தொலைவில் உள்ள மகாவலி கங்கை நதிக்கரையில் அமைந்திருக்கும் குருதெனிய குருந்துவத்தை கிராமத்தில் தான் இந்த ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் உள்ளது. தென்னையும், மிளகும், கோப்பியும், வாழையும் மற்றும் பல்வகை மலைபடு திரவியங்களும் விளையும் இக் கிராமத்தில் வாழும் பௌத்த பெருமக்களும் இந்துப் பெருமக்களும் ஏனையோரும் மிகவும் பக்தி சிரத்தையுடன் வழிபட்டுவரும் இவ்வாலயம் இலங்கையில் உள்ள தனித்துவம் மிக்க ஓர் ஆலயமாகும்.

இவ்வாலயத்தில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ முத்துமாரியம்மன் மலையகத்திலும் மற்றும் நம் நாடெங்கும் எழுந்தருளி இருக்கும் முத்துமாரியம்மன் திருக்கோலம் போலன்றி இங்கு எழுந்தருளி இருப்பதோ ஆறு கன்னியர்களை ஆறு கரத்திலும் ஏந்தி இருக்கும் ஆறு கன்னி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆவார்.

எனவே இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தனித்துவமான பாரம்பரிய பண்பாட்டு ஆய்வுக்குரிய ஆலயமாகும். நம் நாட்டில் வேறு எங்குமே இப்படியானதொரு ஆறு கன்னி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் எழுந்தருளி இருப்பதாக இல்லை.


மலையகத்தின் வரலாற்றில் இது முதன்மையானதும் சுமார் 220 வருட பழமையான ஓர் ஆலயம் எனவும் கருதப்படுகின்றது. கண்டியை ஆண்ட கடைசி மன்னன் ஸ்ரீ விக்ரம ராஜசிங்கனின் காலத்தில் தமிழக திருநெல்வேலி மாவட்டத்தில் இருந்து இப்பிரதேசத்தில் குடியேறியதாக ஊகிக்கப்படும் இந்துப் பெருமக்களால் அமைக்கப்பட்ட இவ்வாலயத்திற்கு அங்கிருந்தே கொண்டு வரப்பட்ட இந்த ஆறு கன்னி ஸ்ரீ முத்துமாரியம்மனின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

இந்த முத்துமாரியம்மன் சிலை ஒரு மரத்தினால் ஆன சிலையாகும். என்றாலும் இது பார்ப்போரின் கண்களுக்கு வெண்கலச் சிலைபோலவே காட்சியளிக்கின்றது. இவ்வாலயத்தில் ஸ்ரீ பத்திரகாளியின் வெண்கலச் சிலை ஒன்றும் அதே காலகட்டத்தில் அதே மக்களால் தமிழகத்தில் இருந்து கொண்டு வந்து பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மண் சுவர்களால் ஆன மிகச்சிறிய ஓர் ஆலயமாக கண்டிய மன்னர் காலத்தில் இப்பிரதேசத்தில் விவசாய பெருமக்களாக குடியேறிய இந்துப் பரம்பரையைச் சார்ந்த ஸ்ரீ சுடலை முத்து நாடார் என்பவரால் தான் இவ்வாலயம் அமைக்கப்பட்டதாகவும் ஆய்வுத் தகவல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன.

ஸ்ரீ சுடலை முத்து நாடாரின் வழித்தோன்றல்களே இவ்வாலயத்தைக் கடந்த சில ஆண்டுகளுக்கு முன் புனர்நிர்மாணம் செய்து மகா கும்பாபிஷேகத்தையும் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னையின் ஆலய முன்னைய முகப்பு



முன்னைய முகப்பின் அழகுச் சிற்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலயத்தில் வருடாந்த திருவிழாவாகச் சித்திரத் தேர் திருவிழா பக்திப் பெருவிழாவாக நடைபெற்று வருகிறது. இத் திருவிழாவையொட்டி நடைபெறும் விஷேட பூசை ஆராதனைகளில் குருதெனிய குருந்துவத்தை பிரதேசங்களில் பெரும்பான்மையாக வாழும் பௌத்த சிங்கள மக்கள் பெருவாரியாக பங்கு கொண்டு வருவதோடு இக்கிராமங்களினூடாக நடைபெறும் தேர்த்திரு உலாவின் போது அலங்கரிக்கப்பட்ட முத்தேர்களிலும் எழுந்தருளி வெளிவீதி திரு உலா செல்லும் ஸ்ரீ முத்துமாரியம்மனுக்கும் ஏனைய தெய்வங்களுக்கும் வழி நெடுகிலும் பௌத்த பெருமக்களும் அபிஷேக பூஜைகள் செய்து கொள்வதும் இன ஐக்கியத்தைப் பேணும் செயலாகும். இவ்வாலயத்தில் நடைபெறும் இரண்டாவது தனித்துவமான வருடாந்த திருவிழாவாக ஆடிப்பெருக்கு திருவிழா பாரம்பரிய பண்பாட்டு ரீதியில் நடைபெற்று வருவது இலங்கைத் திருநாட்டிலேயே இங்கு மட்டும் தான் என்பது அதிவிஷேடமான அம்சமாகும். தமிழகத்தில் காவேரி நதியில் நடைபெறுவதைப் போன்று ஆடிப்பெருக்குத் திருவிழா மகாவலி கங்கையில் பாரம்பரிய சம்பிரதாய ரீதியில் சங்காபிஷேக பூஜை ஆராதனைகள் என்பவற்றோடு நடைபெறுவது இங்கு மட்டும்தான் என்று நம்பப்படுகின்றது. தமிழகத்தின் தலை சிறந்த சிற்பிகளின் கைவண்ணத்தால் உருவாக்கப்பட்டுள்ள ஆறு கன்னி முத்துமாரியம்மனின் மரச்சிலை காண்போரைப் பக்திப்பரவசத்தில் ஆழ்த்தி மெய்மறக்கச் செய்யும் சக்தியும், மகிமையும் மிக்கதாகும். இது ஒரு பளிங்குச் சிலையா? வெண்கலச் சிலையா? பொற்சிலையா? என்று வியக்கும் விதத்தில் அமைந்துள்ளது. இங்கு எழுந்தருளி இருக்கும் வெண்கலத்தினாலான ஸ்ரீ பத்திரகாளியம்மன் சிலையும் அதி அற்புதமான பயபக்தியூட்டும் பாங்கினைக் கொண்டது.

இவ்வாலயத்தில் ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி தினத்தன்று மிகச் சிறப்பாக அதிவிஷேட பூஜையாக திருவிளக்கு பூஜை நடைபெற்று வருகின்றது. கண்டி மாநகரில் இருந்தும் செங்கடகல ஹேவாஹெட்ட பிரதேசங்களில் இருந்தும் மற்றும் வெளியூர்களில் இருந்தும் பெருந்திரளான சுமங்கலிகளும் கன்னியர்களும் திருவிளக்கு பூஜை செய்ய இவ்வாலயத்திற்கு வருகின்றனர். ஏராளமான பௌத்தப் பெருமக்களும் இவ்வாலயத்தில் நடைபெறும் பல்வேறு வைபவங்களிலும் கலந்து கொள்வதானது இன ஐக்கியத்திலும் இவ்வாலயம் ஒரு முக்கிய பங்கு வகிப்பதை எடுத்துக்காட்டுகிறது.

இலங்கையிலுள்ள ஒரே ஒரு ஆலயமான ஆறு கன்னி ஸ்ரீ முத்துமாரியம்மன் எழுந்தருளி இருக்கும் இவ்வாலயத்தின் தனித்துவத்தையும் அதன் வரலாற்று பாரம்பரிய பண்பாட்டு அருமை பெருமைகளையும் நம்நாட்டு வரலாற்று ஆசிரியர்களும் ஆய்வாளர்களும் இந்துமதப் பெரியார்களும் தங்களது ஆய்வுக்குட்படுத்தி இதுபற்றி இன்றுவரை அறியப்பட்டாமலுள்ள முழுமையான தகவல்களையும் வழங்கிட முன்வர வேண்டும் என்பதே வழிபாட்டாளர்களின் பேரவா ஆகும்.

குருதெனிய குருந்துவத்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன், ஸ்ரீ பத்திரகாளி தெய்வங்களின் கருணையினாலும் பேரருளாலும் நம் நாட்டிலும் உலகிலும் சமாதானமும் சாந்தியும் நிலவிடவும் அனைத்து மக்களும் உயர் வாழ்வெய்திடவும் பிரார்த்திப்போம்!

க. ப. சிவம்
(கண்டி நிருபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலஸ்தாபனத்தில்
பக்தர்
புடைசூழல்



பாலஸ்தாபனத்தில்
அன்னையுடன்
அந்தணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய பாலஸ்தாபனத்தில் அடியவர் வரிசை



அன்னை உறையும் ஆலயத்துக்கு அடிக்கல் நாட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அன்னைக்காய்க்கூடும் அடியவர் கூட்டம்



அம்பாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அடிக்கல் நாட்டும் அற்புதக் காட்சி




அன்னை அடிக்கல் வாழ்வுக்குப் படிக்கல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமையும் ஆலயத்தின் அழகு மாதிரிப்படம்



நிமிரத்தொடங்கும் ஆலய அமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நன்றி நன்றி...

அறுகன்னி ஸ்ரீ முத்துமாரி அம்மனுக்கு ஆலயம் அமைத்து அதில் குடியமர்த்தி விழாச் செய்து மகிமையை மலராகவும் வெளியிட்டு, அன்னதானம்மிட்ட அனைவருக்கும் நன்றிகள்.

- ஆலயத்தை நிர்மாணிக்க ஈடுபட்ட இலங்கையர் மற்றும் இந்தியர்கள் அனைவருக்கும்
- ஆலயத்தில் உள்ள சிற்ப வேலைகளைப் பூர்த்திப்படுத்திக் கொடுத்த சிற்பாசியார்களுக்கும்
- ஆலயத்தை ஜொலிக்க வர்ணம் தீட்டிய வர்ண கலைஞர்களுக்கும்
- இந்த ஆலய அடிகல் நாட்டு விழா தொடக்கம் இன்று வரையும் எம்முடன் இணைந்து பணம் மற்றும் பொருள் உதவிகளைச் செய்த பக்த அடியார்கள் அனைவருக்கும்
- இந்தக் கும்பாபிஷேகத்தை மிகச் சிறப்பாக நடத்துவதற்கு எம்முடன் இருக்கும் சிவாச்சாரியர்களுக்கும் குருக்கள்மார்களுக்கும் சர்மாக்களுக்கும் உங்கள் அனைவருக்கும்
- கடலாகத் திகழும் மக்களுக்கும் அன்னதானம் வழங்க வந்த தான யோகிகளுக்கும்
- இந்தக் கும்பாபிஷேக மலரை வெளியிடுவதற்காக எம்மோடு கரம் கொடுத்த மலர் ஆசிரியர், எமக்குக் கட்டுரைகளை தந்துதவிய பேராசிரியர்கள், கலாநிதிகள், பட்டதாரிகள் மற்றும் இந்த மலருக்கு ஆசிச் செய்தி தந்துதவிய அடியார்கள், திருபொன்னூஞ்சல் எழுதிய கவிஞர் ஆகியோருக்கும்
- ஆலயத்தை மலர்களால் பிரகாசிக்க வைக்கும் மலர் விநியோகிஸ்தர்களுக்கும்
- நாதஸ்வர மற்றும் தவில் வித்துவான்களுக்கும்

எம் இதய பூர்வமான நன்றிகள் என ஆயிரம் முறை கரம் குவித்து நன்றி செலுத்துகின்றோம் நன்றி...

இப்படிக்கு
ஆலய பரிபாலன சபை
அங்கத்தவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org